Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம், பிலவ பங்குனி 18 ஆம் நாள் ஷவ்வால் 24 (மார்ச் 31-ஏப்ரல் 02) சனிக்கிழமை இதழ் 49

POLIOVACCINE

at

Royal Dispensary

Phone: 397, JAFFNA.

யாழ்ப்பாணத்தில் இளம்பிள்ளை வாதநோய்

தடுப்பு மருந்து உடனே அனுப்புக!

பார்லிமெண்டில் நல்லூர் எம். பி. கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குக் கிடைத்த இளம்பிள்ளை வாதநோய் தடுப்பு மருந்துகளில் ஒருபகுதியை உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கவேண்டுமென்று நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் சபை ஒத்தி வைப்புப் பிரேரணைமீது பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

இவ்விஷயத்தை சுகாதார மந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக சபை முதல்வர் திரு. சி. பி. டி' சில்வா கூறினார்.

சபை ஒத்திவைப்புப் பிரேரணீமீது பேசுகையில் நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் கூறியதாவது:

இளம்பிள்ளை வாதநோய் யாழ்ப்பாணத்திலும் பரவத் தொடங்கியுள்ளது. இது என்ன துரதிர்ஷ்டமோ தெரியாது. இந்த நோய்க்கு யாழ்ப்பாணத்தில் ஒரு குழந்தை பலியாகியுள்ளது. இந்நோயில் இளம்பிள்ளை வாதநோய் தடுப்புமருந்தும் யாழ்ப்பாணத்தில் இல்லை.

இளம்பிள்ளை வாதநோய் தடுப்பு மருந்து யாழ்ப்பாணத்தில் கிடைப்பதற்கு சுகாதார மந்திரி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுவிஷயம்பற்றி சுகாதார மந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக சபை முதல்வர் திரு. சி. பி. டி' சில்வா பதிலளித்தார்.

பட்டிருப்பு எம். பி. கோரிக்கை

கல்முனை, மட்டக்களப்பு, அம்பாரை ஆகிய பகுதிகளுக்கு இளம்பிள்ளை வாதநோய் தடுப்பு மருந்து அனுப்பு மாறு சுகாதாரசேவை உதவி டைரக்டர் டாக்டர் ஹெரத்தைச் சந்தித்து பட்டிருப்பு

[redacted]

"தென்னிலங்கைக்கு சமாதானத் தூதுவர்"

கேணல் உடுகமவுக்கு அளித்த உபசார விருந்தில் பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

"எனது சேவைகளை யாழ்ப்பாண மக்கள் உண்மையில் பாராட்டுவதைப் பார்க்க நான் மகிழ்ச்சியடைகிறேன்." என்று யாழ்ப்பாண மாவட்ட இணைப்பு அதிகாரியாகக் கடமையாற்றி கொழும்புக்கு மாற்றலாகிச் செல்லும் கேணல் உடுகம தமக்களிக்கப்பட்ட பிரியாவிடை விருந்துபசாரமொன்றுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினர்.

பதவி உயர்வு பெற்றுச் செல்லும் கேணல் உடுகமவுக்கும் திருமதி உடுகமவுக்கும் யாழ்ப்பாணம் வாடிவீட்டில் நேற்று முன்தினமிரவு ஒரு விருந்துபசாரமளிக்கப்பட்டது. நூறு பேர் கலந்துகொண்ட இந்த விருந்துபசாரத்துக்கு டாக்டர் வி. டி. பகபதி தலைமை வகித்தார்.

கேணல்உடுகமவுக்குப் பிரியாவிடை கூறுகையில், யாழ்ப்பாண மக்களுக்கு கேணல் உடுகம அதிக சேவை புரிந்துள்ளாரென்றும் அவரது சேவையை யாழ்ப்பாணம் இழப்பது வருத்தத்துக்குரியதென்றும் டாக்டர் பகபதி கூறினர்.

கேணல் உடுகம தமக்களிக்கப்பட்ட உபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், தமது சேவையை யாழ்ப்பாணமக்கள் உண்மையில் பாராட்டுவதைக்காணத் தாம் பெரு மகிழ்ச்சியடைவதாகக் கூறினர். பொதுமக்களும் சகசேரி உத்தியோகத்தர்களும் எனக்களித்த ஒத்துழைப்புக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய ஒத்துழைப்பும் ஆதரவும் இல்லையென்றால் நான் இவ்வளவும் செய்திருக்கமுடியாது" என்று கேணல் உடுகம கூறினர்.

(8ம் பக்கம் பார்க்க)

மண்ணெண்ணை, பெட்ரோல் விலையில் மாற்றம்

கொழும்பு, வெள்ளி

இலங்கை பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனம் ஏப்ரல் மாதக் கடைசியில் விற்பனையை ஆரம்பிக்கவிருக்கிறது.

பெட்ரோலியம் பொருட்களின் ஆகக்குறைந்த விலை விபரங்கள்பற்றிய புதிய உத்தரவு இன்றிரவு வெளியிடப்படும். விசேஷ கஸட் அறிக்கையில் வெளியாகவிருப்பதாகவும் நிதிமந்திரியின் சம்மதத்துடன் இந்த விலைமாற்றங்களைத் தாம் செய்திருப்பதாகவும் உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி.பி.இலங்கரத்தினை இன்று பார்லிமெண்டில் கூறினர்.

அமைச்சர் இலங்கரத்தினை தெரிவித்த விலைவிபரம் வருமாறு:-

ஒரு கலன் மண்ணெண்ணெய் கொழும்பில் 98 சதம். யாழ்ப்பாணத்தில் ரூ. 1-22 சதம். பெட்ரோல் (சாதாரணம்) கொழும்பில் ஒரு கலன் ரூ 2-96 சதம்; யாழ்ப்பாணத்தில் ரூ. 3-31 சதம். பெட்ரோல் (விசேஷம்-சுப்பர்) கொழும்பில் ஒரு கலன் ரூ. 3-16 சதம். யாழ்ப்பாணத்தில் ரூ. 3-51 சதம்.

இந்தப் புதிய விலைகள் இன்றிரவிலிருந்து அமுலுக்கு வருவதாக அமைச்சர் இலங்கரத்தினை கூறினர்.

இலங்கை பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனத்தின் பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் இப்பொழுதுள்ள பெட்ரோல் கம்பனிகளின் பெட்ரோலியப்பொருட்களின் விலைகளை விடக் குறைவானது என்று திரு. இலங்கரத்தினை தெரிவித்தார்.

பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனத்தின் சில்லறை விற்பனை நிலையங்கள் ஆரம்பத்தில் சில பகுதிகளில் சில சில பொருட்கள் விற்பனை செய்வதற்காகத் திறக்கப்படுமென்றும் பின்னர் படிப்படியாக இதர இடங்களிலும் திறக்கப்படுமென்றும் அமைச்சர் கூறினர்.

இன்னும் மூன்று நான்கு மாதங்களில் நாடுமுழுவதிலும் இலங்கை பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனத்தின் பெட்ரோலியப் பொருள்களை விற்பனை செய்யும் நிலையங்கள் திறக்கப்பட்டுவிடுமென திரு. இலங்கரத்தினை தெரிவித்தார்.

யாழ்ப்பா[redacted] நோய்தடுப் மக்களுக்கு பகுதியின

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திலும் இளம் பிள்ளை வாதநோய் பரவிவரத் தொடங்கியுள்ளது. நகரத்திலும் கிராமப்புறங்களிலும் தற்போது இந்நோய் பர்விவருவதால் வைத்தியப்பகுதியினர் நோய் தடுப்பு முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இங்கு 5 பேருக்கு இந்நோய் கண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இன்று மேலும் மூன்று பேருக்கு இந் நேய் கண்டிருப்பதாகத் தெரியவருகிறது. நகரசபை எல்லைக்குள் ஒருவருக்கும் கிராமப்பகுதியிலுள்ள 7 பேருக்கும் இந் நோய் பரவியுள்ளதாக கானப்பட்டுள்ளது.

கொக்குவில், உரும்பிராய், ஜரெழு போன்ற கிராமங்களிலும் தற்போது இந் நோய் பரவியுள்ளதாகத் தெரியவருகிறது.

நோய் கண்டுள்ள பகுதிகளில் யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என். சிவஞானசுந்தரம் தாமே சென்று தடுப்பு ஊசி போட்டு வருகிறார்.

மூன்று மாதக் குழந்தையிலிருந்து 12 வயதுச் சிறுவர்களுவரை இந்தத் தடுப்பு ஊசி போடப்படுகிறது.

இந் நோய் இங்கும் பரவி வருவதால் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள மக்களை சுகாதார்மாகவும் எச்சரிக்கையாகவும் இருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ்பற்றி பார்லிமெண்டில் கேள்வி

117 பொலிஸ்காரர் வைத்திய விடுமுறையில் நின்றனர்!

கொழும்பு, வெள்ளி

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 117பொலிஸ்காரர்கள் வேலைக்குச் செல்லாமல் வைத்திய லீவில் நின்றது உண்மையா? இது சம்பந்தமாக என்ன நடவடிக்கைளடுக்கப்பட்டுள்ளது? என்று திரு. எட்மண்ட் சமரக்கொடி இன்று பார்லிமெண்டில் சபை ஒத்திவைப்புப் பிரேரணீமீது பேசுகையில் கேட்டார்.

யாழ்ப்பாணம் பொலிசிலுள்ள 117 பொலிஸ்காரர்கள் யாழ்ப்பாணம் உதவிப்பொலிஸ் சுப்ரீண்டனின் வேலைநேர உத்தரவொன்றை ஆட்சேபித்து வேலைக்குச் செல்லாமல் இம் மாதம் 21ந் திகதியிலிருந்து 25ந் திகதிவரை வைத்திய லீவில் நின்றது தெரியுமா? இவர்களனைவரும் சிங்களப்

(8-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

உங்கள் நோய்

குணப்படுத்த உதரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணானந்தர், மகவாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

EL தொடர்பிலக்கமுள்ள ஆஸ்ரின் சோமசெற் கார்கள் இரண்டு சொந்த பாவிப்பில் நல்ல நிலைமையிலுள்ளது. விபரங்களுக்கு: நிர். 216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள EL தொடர்பிலக்கமுள்ள ஹில்மன் மிங்ஸ் கார் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். 36, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

தேவை

ஈழநாடு 50 பத்திரிகை மட்டும் விற்பதற்கு 5 பையன்கள் தேவை. 50 பத்திரிகை விற்பதற்கு சம்பளம் ரூபா 2. பொறுப்புப் பணம் ரூபா 5. எஸ். ஏ. பஸ்தியாம்பிள்ளை, சிங்கப்பூர் கபே, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள EL தொடர்பிலக்கமுள்ள ஹில்மன் மிங்ஸ் கார் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். 36, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

தேவை

பருத்தித்துறையில் ஓர் பல சரக்குக் கடை குத்தகைக்கோ, கமிஷனுக்கோ கொடுக்க இருக்கிறது. தொடர்ந்து வியாபாரம் நடைபெறுகிறது—பெட்டி எண் SX 636C|o ஈழநாடு, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

உங்கள் தினப்பலன்

-சோதிடஆசான்செ.தெல்லிபூர்-

பிலவ ஆண்டு பங்குனிமாதம் 18-ந் திகதி சனிக்கிழமை (31-3-62) பிற்பகல் 1-10 வரை கசமி. பின் ஏகாதசி. இரவு 12-01வரை திருவோணம். பின் அவிட்டம். சித்தயோகம் பிற்பகல் 1-11 வரை. பின் மரணயோகம். காலையில் சுபகருமங்களைச் செய்க. மாலையிலும் இரவிலும் தெய்வவழிபாடு உகந்தது

இன்று பிறந்தவர்களுக்கு

இவர்களுக்கு சிறிது கஷ்டபலன்கள் கூடுதலாக இருக்கும். அறிவு வளர்ச்சியும், மதிப்பும் காணப்படுகின்றனவாயினும், பிரயாணக் கஷ்டமும், பொருள் செலவும், முயற்சித்தடைகளும் இருக்கும். தேகநலம் பாதிக்கப்படும். வர்த்தகருக்கு சுமாரான வருவாய் இருக்கும். விதை அபிவிருத்தியுண்டு. பெண்களுக்கு கஷ்டபலன்—நம்பி ஏமாறுதல் காணப்படுவதால் நிதானமாக நடப்பது அவசியமாகும். தெய்வ வழிபாடு நலந்தரும்.

நட்சத்திரப் பலன்

அச்சுவினி: தெய்வஉதவி, பணத்தகராறு வெற்றி.

பரணி: தாயாதிகள் கஷ்டம், முதியோர் சிந்தை.

கார்த்திகை: குடும்பச் சேர்க்கை, தனலாபம்.

ரோகிணி: வெப்பரோகம், கஷ்டம்.

மிருகசீரிடம்: சகோதரர் நிலைவு, சுபகரும முயற்சி.

திருவாதிரை: வித்தைச் சிறப்பு, தொழிற்சிறப்பு.

புனர்பூசம்: செலவு அதிகம், தொழிற்சிந்தனை.

பூசம்: புத்திசாதுர்யம், கடன்வரவு.

ஆயிலியம்: தேகநலக்குறைவு, கடும்சிந்தனை.

மகம்: பெரியோர் நட்பு, நண்பரால் உதவி.

பூரம்: வீண்தகராறு, ஊழியர் தொல்லை.

உத்தரம்: தனலாபம், முயற்சி வெற்றி.

அத்தம்: வெப்பரோகம், செலவு அதிகரிப்பு.

தகராறு முடிந்தது

நீர்கொழும்பு, வெள்ளி

நீர்கொழும்பு மாநகரசபைக்கும், பிரதம என்ஜினியருக்கும், மின்சார பகுதி மனேஜருக்குமிடையே மின்சார வரி சம்பந்தமாக நீண்டகாலமாக இருந்து வந்த சச்சரவு ஒரு முடிவுக்கு வந்துள்ளது. திரு. ஈ. ஜீ விக்கிரமநாயக்காகியு. ஸி. நடுநிலைமை வகித்து, இரு சாராருக்குமிடையே ஒரு சமரச முடிவை ஏற்படுத்தியுள்ளார்.

வரி சம்பந்தமாக அரசாங்கத்துக்கும் சபைக்குமிடையே உடன்பாடு இல்லாமல் புதிய வரியை சட்ட மூலமாக நிறைவேற்றுவது சரியா என்பது பற்றி திரு. விக்கிரமநாயக்கா தீர்மானிப்பார்.

புனித யாத்திரை

பதி, வெள்ளி

பதியில் பிரபல வியாபாரியான திரு. எம். அப்துல்ஹமீது மக்கா நகருக்குப் புனித யாத்திரை செல்வதை முன்னிட்டு நண்பர்களாலும் உறவினர்களாலும் ஓர் தேனீர் விருந்து அளிக்கப்பட்டது.

சித்திரை: உடன்பிறந்தோர் சிந்தனை, தொழில்நலம்.

சுவாதி: வித்தைவளர்ச்சி, தொழிலுயர்ச்சி.

விசாகம்: தொழில்வெற்றி, தனலாபம்.

அனுஷம்: புத்திசாதுர்யம், தொழில்வெற்றி.

கேட்டை: தேகநலக்குறைவு, குடும்பக்கவலை.

மூலம்: பெரியோர் நட்பு, மதிப்புயர்ச்சி.

பூராடம்: வித்தை வளர்ச்சி, பொருள்வரவு.

உத்தராடம்: பெரியோர் தொடர்பு, நல்லுபதேசம்.

திருவோணம்: தேகநலக்குறைவு, வைத்தியச்செலவு.

அவிட்டம்: நற்செய்தி, பணச்செலவு.

சதயம்: வாக்கு வெற்றி, தொழில்நலம்.

பூரட்டாதி: ஊழியர் உதவி, முயற்சிபலிதம்.

உத்தரட்டாதி: தெய்வவழிபாடு, சுகம்.

ரேவதி: புகழ், பொருள்வரவு.

பெண்ணின் மார்பு சட்டைக்குள் ரூபாய் 2224 இருந்தது

தபால் பை திருட்டு வழக்கில் பெண் பொலிஸ் சாட்சியம்

ஹிண்டகல, வெள்ளி

"திருமதி பெர்ணன்டோவின் மார்புச் சட்டைக்குள், ரூ. 2,150 இருக்கக் கண்டு பிடித்தேன். அத்துடன், அவரது கைப்பைக்குள் ரூ. 94 ம் இருக்கக் கண்டேன். மொத்தமாக திருமதி பெர்ணன்டோவிடம் ரூ. 2,224 இருந்தது."

கண்டி மாஜிஸ்திரேட் முன்னிலையில், கொழும்பு போக்குவரத்து தகவல் பகுதியைச் சேர்ந்த பெண் பொலிஸ் கான்ஸ்டபிளான லிலியன் வீரக்கூன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரூ. 450,000 மதிப்புள்ள இரண்டு தபால் பைகளைக் களவாடியதாக ஆறு பேர்மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட இவ்வழக்கு, கண்டி மாஜிஸ்திரேட் திரு. பி. எஸ். டபிள்யு. அபயவர்த்தன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது, பொலன்னறுவ பொலிஸ் உதவி சுப்பிரின்டன் திரு. ஆர். சி. தேவராஜா தெரிவிக்கையில் புகையிரத கார்ட் ஒருவரின் உதவியுடன் சுமார் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள தபால் பைகளை திருடுவதற்கு மூன்றாவது எதிரி ஆயத்தங்கள் செய்துகொண்டிருப்பதாக, 1961-ம் ஆண்டு ஆரம்பத்தில், சார்ஜண்ட் அப்புஹாமியிடமிருந்து தமக்கு தகவல் கிடைத்தது என்றும், இந்த மாபெரும் கொள்ளை, பெப்ரவரி மாதம் 9 ம் திகதிக்கும் 10 ம் திகதிக்குமிடையில் நடைபெறப்போவதாகவும் சார்ஜண்ட் அப்புஹாமி தெரிவித்திருந்தாரென்றும் கூறினர்.

மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

பிரிட்டிஷ் சுகாதார மகாநாட்டில்

இலங்கைக்கு அங்கத்துவம்

லண்டன், மார்ச் 30

ஏப்ரல் 9-ம் திகதி தொடக்கம் 13-ம் திகதிவரை ஸ்காவரோ, யோக்ஷயரில் நடபெறவிருக்கும் ரோயல் சுகாதார கார்ங்கிரஸ் சபைக்கு, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இடங்களிலிருந்து பிரதி நிதிகள் செல்வர்.

3,500 பேர் அடங்கிய உலகப்பிரதிநிதிகள் சுகாதாரம், பொழுது போக்கில் புதுமுறைகள், நகரங்களின் வருங்காலம், தொழிலாளர்களின் சுகாதாரம், அணுசக்தி நிலையங்களில் முதல் உதவிகள், சித்த சுகாதாரம் போன்றவற்றை ஆலோசிப்பதற்கே இம் மகாநாட்டில் கூடுகின்றனர்.

அவர்களில் 1000 பேர் உள்ளூர் அதிகாரிகளும், மிகுதியானோர் வைத்தியர்கள், வைத்திய அதிகாரிகள் வைத்தியப் பகுதியில் வேலை செய்வோர் ஆகியோரும் ஆவர்.

ரோயல் சுகாதாரச்சபை நிருபர் ஒருவர் பின்வருமாறு கூறினர்: உலக சுகாதார வளர்ச்சி முன்னேறுவது இச்சபையின் நோக்கமாகும். வருடாந்த கூட்டங்கள் வைத்தியப்பகுதியார் தம் எண்ணங்களைக் கலந்தாலோசிப்பதற்கும், தம் வேலையில் வளர்ச்சி உண்டாக்குவதற்கும் உதவும். எங்கள் பிரதிநிதித்துவம் உலகம்முழுவதும் பரந்திருக்கிறது. இங்கு ஆலோசிக்கப்படும விஷயங்கள் மிகவும் முக்கியமானவையாகும்.

பொதுச் சுகாதாரவசதிகளின் முன்னேற்றம்பற்றிஒருசுகாதாரக் கண்காட்சியும் அதே சமயம் காட்டப்படும்.

மாமைட் எனக்கும் என் குடும்பத்தாருக்கும், நற்சுகமும் பெலனும தருகிறது

இவர்கள் யாவரும் நன்றாகச் சாப்பிடுகிறார்கள். அதிக சக்தியும பெலனும் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். பலததிற்கும் வீரியத்திற்கும் உங்கள தினசரி ஆகாரத்தில ஒரு பாகமாக நீங்கள மாமைட்டை தினசரி அருந்தி வரவேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானால் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அலலது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அலலது பனாட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில சேர்க்கும போழுது அதிகப் படியானருசியை மட்டுமின்றி உங்கள தினசரி ஆகாரத்தைச் சமைக்கும பொழுது தேவையான விட்டமின பிசதுகளையும் கூட்டிக் கொள்கிறீர்கள.

மாமைட் பிரக்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.

மாமைட்

புதிய ஜனாதிபதியை ஏற்கராணுவம் மறுப்பு

அர்ஜண்டினாவில் இன்னும் குழப்ப நிலை

புவனஸ் அயர்ஸ், மார்ச் 30

கைது செய்யப்பட்ட அர்ஜண்டினா ஜனாதிபதி பிராண்டிஸி சிறைத்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் சிறை வைக்கப் படுவார்.

அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட செனட் தலைவரான ஜோஸ்மரியோ கீடோ, ஜனாதிபதியாக இருப்பதை படைத் தலைவர்கள் ஏற்க மறுப்பதாய்க் கூறப்படுகிறது. தாங்களே ஆட்சியை ஏற்கவும் ராணுவத்தினர் தயங்குவதாயும் கூறப்படுகிறது. அரசியல் நிலைமை இன்னும் ஒரு ஸ்திரத்துக்கு வராமல் குழப்பமாய் இருப்பதாயும் ஆனால் தலைநகரில் அமைதி நிலவுவதாயும் கூறப்படுகிறது.

ராஜ்யசபை தேர்தலில் காங்கிரசுக்கு 43 ஸ்தானங்கள் இதர கட்சிகளுக்கு 18

புதுடில்லி, மார்ச் 30

இந்தியாவின் 11 ராஜ்யங்களில் நடைபெற்ற ராஜ்யசபைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. மொத்தம் வெளியான 61 ஸ்தானங்களில் காங்கிரசுக்கு 43 ஸ்தானங்கள் கிடைத்துள்ளன.

திரு. ஹபீஸ் முகமது இப்ராஹிம், திரு. கர்மார்கர், ஜயப்பூர் மகாராஜா, திரு. எம். எல். சக்ளா ஆகியோர் தெரிவு செய்யப்பட்ட கிலராவர். கட்சி ரீதியில் தேர்தல் முடிவுகள் வருமாறு:-

காங்கிரஸ்	43
கம்யூனிஸ்ட்	3
பிரஜாசோஷலிஸ்ட்	3
ஜனசங்	2
சோஷலிஸ்ட்	1
சுதந்திரா	1
ஜார்கண்ட்	1
சுயேச்சை	7

'பாடசாலைகளை நல்ல முறையில் பேணவேண்டும்'

—எம். பி.

சாவகச்சேரி, வெள்ளி

பள்ளிக்கூடங்கள் அரசினரால் தேசியமயமாக்கப்படுவதினால் அவற்றை நல்லமுறையில் வைத்திருக்க மக்கள் அனைவரும் முனவரவேண்டும் எதிர்காலத்தில் அவ்வப்பகுதிப் பிள்ளைகள் அவ்வப்பகுதிப்பாடசாலையிலோ கல்லூரியிலோ படிக்கவேண்டுமெனச் சட்டம் வருகிறபடியால் இக்கல்லூரியை உயர்ந்த நிலையில் வைக்கநவண்டியது எமது கடமை. இப்போது அரசாங்கம் உள்ள நிலையில் எரிந்த கட்டிடத்தைத் திருத்தும் என்று எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் தீப்பற்றிய கட்டிடத்தைத் திருத்துவது சம்பந்தமாகக் கூடிய கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசும்போது குறிப்பிட்டார்.

பொருள் சேர்த்துக் கல்லூரியைத் திருத்தப் பதினைரு பேர் கொண்ட ஓர் உபசபை தெரிவுசெய்யப்பெற்றது. வித்துவான் எம். சபாரத்தினம் நன்றி கூறினர்.

தாஜை இயங்கும் ஸ்கூட்டர்

லண்டன், மார்ச் 50

பிரிட்டிஷ் மோட்டார் - சைக்கின் கம்பனியான, ரைய்ம் என்ஜினியரிங் கம்பனி, தாஜை இயங்கும் ஸ்கூட்டரை தாம் உற்பத்தி செய்வதாகத் தெரிவித்துள்ளது. 100 விஸி மெல்லியகனதியான இயந்திரம் 'டிஜி' வுடன் இன்னும்பலமுக்கிய பாதுகாப்புக்கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளது. இதில் முக்கியமானது என்னவென்றால் முழுவதும் தாஜைவே இயங்கும். சாரதி தன்கனத்தை கருவிகளை அழுத்தி ஓட்டுவதில் கவனம் செலுத்தாமல் வாகனப் போக்குவரவில்தான் கவனம் செலுத்தல் வேண்டும். இயந்திரம் ஓடத்தொடங்கியவுடன், தாஜை இயங்கும் கருவிகளும், சுழன்று போகும்போது இயங்கதொடங்கும். இவை மிக மிருதுவாகவும் விரைவாகவும் ஓடும். தாஜை இயங்கும் கருவிகள் வீதியின் நிலைமைக்குத் தக்கதாக சரிப்படுத்திக் கொள்ளும்.

இரு வரை ஏற்றிக் கொண்டு "டிஜி" கூடிய வேகமாக ஒரு மணித்தியாலத்தில் 40 மைல்கள் ஓடும். 100 மைல்களுக்கு ஒரு கலன் அளவில் எண்ணெய் உபயோக மாகும்.

பிரிட்டனில் இவ்வாகனத்தின் சராசரி விலை 76 பவுண்கள். வெளிநாடுகளுக்கு அனுப்பும்போது துறை முக வரி உட்பட 60 பவுண்களுக்கு விற்கப்படும்.

யாரி உயர்வு

பளை, வெள்ளி

முகமாலைக் கிராம சபை, தென்னந்தோட்டச் சொந்தக்காரரிடம் இருந்து அறவிடும் வரியை இவ்வருடம் முதல் கூட்டியுள்ளது. ஐந்து ஏக்கருக்கு மேற்பட்டவர்கள் ஏக்கர் ஒன்றுக்கு ஐம்பது சதம் கட்டி வந்தனர். அதை இப்பொழுது ஒரு ரூபாவாக உயர்த்தியுள்ளது.

தேசிய,சமய உணர்வு இருந்தால் சதிக்கு இடமில்லை'

மந்திரி பேச்சு

மாத்தறை, வெள்ளி

"இந்தநாட்டு மக்களிடையே தேசிய உணர்ச்சியும், சமய உணர்வும் இருந்தால் சதிகாரர்களுக்கு இங்கு இடமே யில்லை."

இவ்வாறு வீடமைப்பு, அமைச்சர் திரு. மகாநாமசமரவீரா மாத்தறை ஸ்ரீமங்கள பிரிவெனவின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினர்.

தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:

"பௌத்த மதமே தேசிய மதமாக இருந்தபோதும் பர்மாவில் இராணுவப்படையினர் ஆதிக்கத்தைத் தமதாக்கிக் கொண்டனர். இந்நாட்டிலும் இப்பேற்பட்ட துக்ககரமான ஒரு நிலைமை சமீபத்தில் ஏற்படவிருந்தது ஆனால் மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் அரசாங்கத்துக்குக் கிடைத்ததனால் இராணுவத்தினர் சதிமுயற்சி தோல்வியில் முடிவடைந்தது. மக்களிடையே தேசியக் கொள்கை களையும் பழக்கங்களையும் ஏற்படுத்துவதற்குத் தர்ம பாடசாலைகளே தக்க சாதனங்களாகும்."

ரஷ்யாவின் திறமான மருந்து

கொழும்பு, வெள்ளி

இலம்பிள்ளை வாதநோய் தடுப்புக்கான ஊட்டமருந்து வில்லைகள் இன்னும் 200,000 த்தை ரஷ்யா இலங்கைக்கு வெகு விரைவில் அனுப்பி வைக்கும். தடுப்பு மருந்து உட்கொள்ளப்பட்டால் நீண்ட காலத்துக்கு உடம்பில் நோய் தொற்றிக்கொள்ளாது எனத் தொற்றுநோய் வைத்தியத்தில் அதிகம் அனுபவம் உடைய டாக்டர் செல்வி கே. ஜ. ஒலுனு கூறியிள்ளார்.

உலகவலம்

திருஜ்பூர்

மேற்கு திருஜ்பூர் பகுதியில் எதுவும் பாகிஸ்தான் வசம் இல்லை என இந்திய உதவி வெளிநாட்டு மந்திரி ஸ்ரீமதி லட்சுமிமேனன் கூறினர்.

அணுசக்தி நிலையம்

உத்தேச அணுசக்தி மின் சாரநிலையத்தை ஆந்திரப்பிரதேசத்தில்ஆரம்பிக்கவேண்டுமென, இந்திய மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தும்படி மேல் சபை அங்கத்தினர்கள் வற்புறுத்தினர்.

மேயர்

பிராங்க்பர்ட் நகர மேயர் கல்கத்தாவிலிருந்து சென்னை வந்தார். மேயர் குசேலருடன் அவர் தேநீர் அருந்தினர்.

சபாநாயகர்

தமிழ்நாடு சட்டசபையின் சபாநாயகர், உப சபாநாயகர் பதவிகளுக்கு முறையே திரு. எஸ். செல்வபாண்டியனையும், திரு. கே. பரர்த்த சாரதியையும் அபேட்சகர்களாக நிறுத்துவதென காங்கிரஸ்கட்சி தீர்மானித்துள்ளது.

32-வது கப்பல்

விசாகப்பட்டினத்தில் கட்டப்பட்ட 32-வது கப்பலான "ஸ்டெட் ஆப் பஞ்சாப்", பம்பாய்க்கு முதல் யாத்திரையை ஆரம்பித்தது.

ஸிரியா

ஸிரியாவில் ஊரடங்கு உத்தரவு அகற்றப்பட்டது.

அடூலா

கடாங்காவின் இணைப்பு பற்றி மட்டுமே ஜனாதிபதி ஷோம்பேயுடன் பேச முடியும் என காங்கோ பிரதமர் திரு.அடூலா கூறினர்.

பங்கர் கடிதம்

இந்தோனேஷிய ஜனாதிபதிகர்னோவுக்குதிரு.எப்ஸ்வர்த் பங்கரிடமிருந்து ஒரு கடிதம் வந்திருப்பதாயும், டச்சு இந்தோனேஷியபேச்சுவார்த்தைகளை தொடர்ந்து அவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாயும் ஒரு செய்தி கூறுகிறது.

குற்றச்சாட்டு

ஜெனிவா ஆயுதப் பரிகரண மகாநாட்டை முறியடிக்க முயல்வதாக ரஷ்யா நேற்று அமெரிக்காவைக் குற்றஞ்சாட்டியது.

காமன்வெல்த் பிரதமர்கள்

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு சம்பந்தமாக அடுத்த வாரம் ஒரு அறிக்கையை வெளியிடவிருப்பதாக பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லன் கூறினர்.

தலைமை ஆசிரியரும் இடமாற்றமும்

கல்வி டைரக்டர் சுற்றறிக்கை

உடுப்பிட்டி, வெள்ளி

"ஒரு பாடசாலையிலிருந்து பிறிதொரு பாடசாலைக்கு மாற்றப்படும் தலைமையாசிரியர், தம்க்குப்பின் தமதிடத்தை நிரப்பவருபவர் நேரகாலத்தில் வந்து சேர்ந்தால் அவரிடமும் அல்லாவிட்டால் பாடசாலை சிரேஷ்ட உதவி ஆசிரியரிடமும் பாடசாலை பொறுப்பைக்கையளித்துவிட்டே தமது பதவியை ஏற்பதற்காகப் பாடசாலையை விட்டு மாற்றத்திற் செல்லவேண்டும்."

இவ்வாறு கல்வி டைரக்டர் திரு. எஸ். எப். டி' சில்வாவின் சுற்றறிக்கை ஒன்று கூறுகிறது. மேலும் அச்சுற்றறிக்கை கூறுவதாவது:

'ஒரு பாடசாலைத் தலைவர் சடுதியாக இறந்தால் சிரேஷ்ட உதவி உதவி ஆசிரியர் பாடசாலைக்குச் சொந்தமான அசைவுள்ள சொத்துக்கள் அனைத்தையும் காசு ஏதுமிருப்பின் அதுவுமுட்பட தமக்கு அடுத்த தான அதி சிரேஷ்ட ஆசிரியர் இருவர் முன்பு சரிபிழை பர்த்துப் பொறுப் பேற்க வேண்டும்.

'யசவதி தற்பெருமைக்காரி'

—சாட்சி

கொழும்பு, வெள்ளி

"யசவதி ஒரு தற்பெருமைக்காரி என்று, எதிரி ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் கூறினர்!

பொரளை கொலைவழக்கு அசைஜ கமிஷனர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம், அளவை உடகண்ட தோட்டத்தைச் சேர்ந்த காவற்காரர் எஸ். ஜேமிஸ் என்பவர் மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

பொரளை கொட்டா வீதியைச் சேர்ந்த திரு ஜி.வீஜயசிங்கா வீட்டில் வேலைபார்த்த எச். ஏ. யசவதி என்ற இளமங்கையை கடந்த வருடம் கொலைசெய்ததாகப் பொரளையைச் சேர்ந்த சாரதி கே. ஏ சற்றின்சிங்கோ என்பவர்மீது குற்றம்சாட்டி இவ்வழக்கு பதிவாகியிருந்தது.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

கொழும்புத் தமிழ்ச் சங்க பேச்சு வன்மைப் போட்டி

கொழும்பு, வெள்ளி

அடுத்த பருவத்தில் மாணவர்களிடையே பேச்சுப்போட்டி ஒன்றை நடாத்திப் பரிசு வழங்கக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் முடிவு செய்துள்ளது. இப்போட்டியில் இலங்கையிலுள்ள மாணவர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.

இப்போட்டி பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு, பொதுப் போட்டியென நான்கு பிரிவுகளாக நடாத்தப்படும்.

பேச்சுப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குக் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் 20-ம் ஆண்டு விழாவில் தங்கப் பதக்கங்களும், வெள்ளிப்பதக்கங்களும் வழங்கப்படும்.

மிகத் திறமையான

பவர்ஸ்

உரங்கள்

கிரிமி நாசினி தெளிக்கும் யந்திரங்களும்

லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

ஏ. பவர்

அன் கொம்பனி லிமிட்டெட்,

த. பெ. 11. கொழும்பு.

மன வாக்கு

தனக்குக் கிடைக்கும் ஜாதியத்தின் மதிப்பைவிட தன்னுடைய உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதன்தான் சமூகத்தில் முன்னேற முடியும்.

— லிங்கன்

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49. Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆனடு பங்குனி மீ 18 உ (31-3-62)

கல்விக் கமிஷன் ஆட்சேபனை

கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள குழப்பங்களை ஆராய்ந்து அவற்றை நீக்குவதற்கு யோசனைகள் கூறுவதற்கென தேசியக் கல்விக்கமிஷனை அரசாங்கம் நியமித்துள்ளது. இக் கமிஷன் கல்வி சம்பந்தமான சிபார்சுகளையும் யோசனைகளையும் இடைக்கால அறிக்கைகள் மூலம் அவ்வப்போது வெளியிட்டு வருகின்றது. ஆனால் கல்வி, இலாகாக் கமிஷன் செய்துள்ள சிபார்சுகளைப் புறக்கணித்துவிட்டுத் தாம் நினைத்தவாறு சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றதென தேசிய கல்வித் திருக்கின்றது.

கமிஷன் ஏற்கெனவே செய்துள்ள சிபார்சுகளுக்கு முரணாகக் கல்வி இலாகா செயல் நிறுமானால்தாம் தொடர்ந்து பணியாற்றுவதில் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை யென தேசிய கல்விக் கமிஷன் கருதுகின்றது கமிஷனின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும் அதற்கு மாறுன சில திட்டங்களை கல்வி இலாகா செய்வதென்னால் கமிஷன் ஒன்றை எதற்காக ஏற்படுத்த வேண்டுமென அதன் அங்கத்தினர் கருதுகின்றனர்.

தேசிய அபிவிருத்திக்கு உதவும் முறையில் கல்வித்திட்டத்தை வகுப்பதற்கு வழிவகைகளை ஆராய்ந்துயோசனை கூற வேண்டியது கமிஷனின் கடமை. நிலைமை இவ்வாறுக. கமிஷன் தனது அறிக்கையை சமர்ப்பித்த பின்னர் அதிற் கண்டுள்ள சிபார்சுகளுக்கு நேர்மாறுன சில திட்டங்களை கல்வி இலாகா மேற்கொள்ளத் தணிவதாயின், கமிஷன் ஒன்றை நிறுவுவதின் அடிப்படை நோக்கமே தகர்ந்துவிடுகின்றதெனலாம்.

கமிஷன்செய்யும் சிபார்சுகள் அனைத்தையும் கல்வி இலாகா அமுல் நடத்த வேண்டுமென எவரும் எதிர்பார்க்கமாட்டார்கள். ஆனு கல்வி அபிவிருத்திக்கு கமிஷன் செய்துள்ள சிபார்சுகளைப் பொதுமக்கள் அறிவதற்கு உரிமை பூண்டவர்கள். அப்படியானால்தான் கல்வி இலாகா மேற்கொள்ளும் திட்டங்கள் உண்மையாகவே நாட்டின் விருத்திக்கு உதகம் தனவோ என்பதை அவர்களால் உணரமுடியும்.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகக் கமிஷன்களை நியமிப்பதும் அதிக செலவில் அவர்கள் வெளியிடும் அறிக்கைகளை அப்படியே ஊறுகாய்ச் சாடிக்குள் ஊறப் போடுவதும் வழக்கமாக்கி கொண்டு வருகின்றது சிக்கலைத் தீர்ப்பதற்கென நியமிக்கும் கமிஷனின அறிக்கைகளைப் புறக்கணிப்பதும், அவற்றுள் காணப்படும் திட்டங்களுக்கு நேர்மாறுக நடப்பதும் விரும்பத்தக்கதல்ல

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையைத் தாம் அமுல் நடத்தப்போவதாகக் கல்வி அமைச்சர் தேர்ய கல்விக் கமிஷனுக்

தமிழ் அகராதிதந்த கதிரைவேற்பிள்ளை நூல் நினைவு நாள்

— "மாவை பாரதி நேசன்" —

தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் அந்நியர் ஆட்சி நிலவிய காலத்தில் தமிழ் மொழி பலதுறைகளிலும் தனது சிறப்பை இழந்துவந்தது.

ஆங்கில நாகரிகமே தீவிரமாகப் பரவியது. இதுபற்றிப் பேராசிரியர் திரு. எஸ். வையாபுரி ஓரிடத்தில் கூறிய கருத்துக்கள் வருமாறு:-

"மக்கள் அனைவரும் தாய் மொழிகளின் வளர்ச்சியைப் பேணுதபடி ஆங்கிலத்தையே பயின்று அதன் மூலமாகவே அறிவு வளர்ச்சி பெற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறுகிறார்கள். இவருள் ஒரு சாரார் தங்களை ஆங்கிலேயராகவே பாவித்து அம்மொழியையே தங்கள் வீட்டிலுங் கூடப் புகுத்தி வருகிறார்கள். ஒருவனுக்கு இரண்டு ஆங்கில வார்த்தை தெரிந்துவிட்டால், அவன் நாகரிகத்தின் எல்லையையும் அறிவின் சிகரத்தையும் அடைந்துவிட்டதுபோல நடிக்கிறான். ஆங்கில நடையுடை பாவனைகளைக் கைக்கொளகிறான். தன்னிலையை முற்றும் மறந்து தாய் மொழியை வழங்குபவர்களை ஏளனத்துடன் நோக்குகிறான்."

இத்தகைய மனநிலை அன்று பொதுவாகக் காணப்பட்டது. இக்காலகட்டத்தில் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கம் அளித்தவர்கள் பலர். மொழியை வளம்படுத்தி, அம்மொழி நிலைத்து நிற்கத் தொண்டு செய்தல் இலேசுவானதொன்றல்ல. நாவலர் பரம்பரை மொழி வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பணி அளவிடற்பாலது. சித்தாந்தசரபம், சதாவதானம் என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகின்ற மேலைப் புலோலி திரு. நா. கதிரைவேற்பிள்ளை காலத்தின் நிலையை நன்கு உணர்ந்தார். என் கடன் பணிசெய்து கிடப்பதே என்றிருந்து சமயத்தையும் மொழியையும் வளம்படுத்தினர்.

'வார்த்தை பதினாயிரத் தொருவர்' என்பது ஔவை வாக்கு. இந்த வாக்கினுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர் திரு. பிள்ளையவர்கள். திரு. கதிரைவேற்பிள்ளை தென்மொழி-வடமொழி, தருக்கம், சித்தாந்த சாஸ்திரங்கள் என்பனவற்றில் பாண்டித்தியம் பெற்று விளங்கினர். சொற்பொழிவாற்றும் திறன் இயற்கையாகவே அமையப்பெற்றவர். இவருக்கு தணிகைப் புராணம் பிரசங்கம் ஈடில்லாப் புகழை ஈட்டிக்கொடுத்து, தென்னிந்தியாவில் எவருமே செய்திருக்காத இப் புராணப் பிரசங்கத்தை முதன் முதலாக அனைவரும் சிந்தை கொளச் செய்த பெருமையைப் பெற்றார்.

பண்டு தொட்டு நிகண்டுகளே வழக்கிலிருந்து வந்தன. மேலை நாட்டினர் வருகையினால் விளைந்த நன்மைகளுள் 'அகராதி' வழக்குக்கு வந்தமையும் ஒன்று. காலத்திற் கேற்ற வகையில் தமிழ்-தமிழ் அகராதியை மொழி வளர்ச்சிக்கு உதவும் பொருட்டுப் பிள்ளையவர்களால் எழுதப்பட்டது. காலத்துக்கு உகந்த முறையிலான அகராதியை ஆக்கித்தந்ததன்மூலம் தமிழ் உள்ளவரை தமிழ் நெஞ்சங்களில் உடனுறைந்து வாழும் பெற்றியைப் பெற்றார். இவரது பேரகராதியிலே அரட்பர என்னுஞ் சொல்லுக்கு பன்னிரு திருமுறைகள் என்று பொருள் கொடுத்தார். இதுபற்றிக் கருத்து வேறுபாடுகள் அறிஞர்களிடையே

குத் தெரிவித்திருக்கின்றார் நாட்டின் விருத்திக்கு நன்மையான திட்டங்களை வரவேற்று அமுல் நடத்துவதில் எந்த அரசாங்கமும் தயங்க வேண்டியதில்லை.

உருவானது மட்டுமின்றி நீதி மன்றம் வரையிலும் கொண்டு செல்லப்பட்டது. இந்த வழக்கு விசாரணையில் தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் கூடச் சாட்சியமளித்தார். பிள்ளையவர்களுடைய மாணவர்களில் ஒருவரான திரு. வி. க. இவ்வழக்கில் சான்றுகள் தேடிக்கொடுப்பதற்காகத் தமது பரீட்சைத் தேர்வினை எழுதாதுவிட்டார்.

இதனை அறியும்போது நம் மையறியாமலேயே பிள்ளைய வர்களுக்கு வீரவணக்கம் செய்யத்தோன்றுகிறது. குறுகிய தமது வாழ்நாளில் தமிழருக்குப் பெருமைதரக்கூடிய நூல்களை எழுதினர். கூர்ம புராண விரிவுரை, சைவ சந்திரிகை, பழநித்தல புராண விரிவுரை, சிவாய மகோற்சவ விளக்கம், சைவ சித்தாந்தச் சுருக்கம், கப்பிரமணிய பராக்கிரமம், நைடதவுரை, புத்தமத கண்டனம் என்பனவற்றை எழுதினார். வேறும் பல அரிய நூல்களை வெளியிடுவதற்காக வைத்திருந்தார்.

மாயாவாதகும்ப கோளரி, ஆரணி சமஸ்தானவித்துவான், அத்துவித சித்தாந்த மகோத்தாரணர், சதாவதானம், சைவ சித்தாந்த மகாசரபம்போன்ற பல பட்டங்களுக்குஉரிமையானராக விளங்கினர்.

சென்னையில் பல இடங்களிலும் சைவ சமய பிரசங்கம் செய்தார். கக்தரமூர்த்தி நாயனர் கூறியதுபோல, "பொய்ம்மையாளரைப் பாடாதே எக்தை புகலூர் பாடுமின் புலவீர்கள்" என்பதனைக் கடைப்பிடித்தொழுகிவந்தார்.

35 ஆண்டுகள் உலக வாழ்க்கையில் ஈடுபட்டு உழைத்தார். யாழ்ப்பாணத்திலேயே தமிழ்க் குடும்பத்திலே பிறந்து தென்னிந்தியாவிலே கூனூரில் தமிழ்ப் பணியையே இறுதி மூச்சாகக் கொண்டு இறைவன் திருவடியை அடைந்தனர் அவர் அமரராகி இன்றுடன் 55 ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன. இத்தகைய பேரறிஞரை நன்றியோடு போற்றும் பண்பு தமிழ்ப் பேசும் மக்களிடையே வளரவேண்டும்.

பேனுநண்பர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம் வெள்ளி அகில இலங்கைப் பேனுநண்பர் கழக ஆலோசனைச் சபையின் பொதுக் கூட்டம் எதிர் வரும் 13-4-62 புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறும். இலங்கையின் எல்லாப் பாகங்களில் இருந்தும் கூட்டத்துக்கு உறுப்பினர்கள் பங்கு பற்றுவார்கள். ஜூன் 7,8 ஆகியதிகதிகளில் நடைபெறவிருக்கும் முத்தமிழ் விழாவில் பல பிற நாட்டு, உள் நாட்டுப் பத்திரிகை ஆசிரியர்களும் பங்கு பற்றிச் சுவையான பேச்சுகள் அழிப்பார்கள்.

இரத்தினக் கம்பனம்

'உப்புமில்லை புளியுமில்லை'

பதுமன்

இது உப்புப் புளியற்ற அரசாங்கம் என்று நேற்றுமுன் தினம் கொஞ்சம் வயதுமுதிர்ந்த ஒருவர் சொன்னார். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. நான் பேசாமல் இருந்தேன். வந்தவர் சும்மா விடவில்லை. கறி சமைக்க உப்பும் இல்லைப் புளியுமில்லை யென அவர் அடித்துக் கூறினர். அப்போதுதான் எனக்கு விஷயம் விளங்கியது. அப்பன் இல்லாவிட்டால் தெரியும் அப்பன் அருமை; உப்பு இல்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை என்று நாடோடியாகச் சொல்வார்கள். ஆனால் இன்று நாட்டில் உப்புத்தான் கிடையாதென்னுஞ் ரசத்துக்கு அத்தியாவசியமான புளியும் கிடைப்பதாயில்லை. அதுமாத்திரமா? சுட்டுக் கடிக்க கருவாடுதானும் இல்லையென எத்தனையோ பேர் முறையிடுகின்றனர். பருப்புக்கும் பப்படத்துக்கும் இன்று ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கவேண்டிய நிலைமையேற்பட்டிருப்பதை அனுபவத்திற் கண்டுதான் போலும் இது உப்புப்புளியற்ற அரசாங்கம் என்று அந்த வயோதிபர் கூறினாரோ என்னவோ?

பார்லிமெண்டில்

சென்ற வியாழக் கிழமை ஜனப்பிரதிநிதிகள் சபைகூடியபோது அங்கு உப்பு, பருப்பு, பப்படம், கருவாடு ஆகிய உணவுப் பொருள்களைப்பற்றி அநேகர் வெளுத்துவாங்கினர். இப்பொருள்களின் பற்றாக்குறை ஒரு புறமிருக்க, எங்கேனும் அவை கண்களுக்குத் தட்டுப்படுமானால் அவற்றைப் பெறுவதற்குச் சகலகலாவல்லியாகப் பணத்தைக் கொடுக்க வேண்டியிருக்கின்ற தென்னைப் பலர் முறையிட்டனர்.

வர்த்தக உணவு மந்திரி திரு. இலங்கரத்ன எதற்கும் ஒன்றுமே பேசவில்லை. உப்பும், பருப்பும், கருவாடும் கிடைப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதென அவர் திருவாய் மலர்ந்தருளினார்.

●

காதலா? கடமையா?

காதலா? கடமையா பெரிது என்பதுபற்றி மூன்றும் பக்கத்தில் ஒரு கலையான கட்டுரை வெளியாகியுள்ளது. காதல் சம்பந்தமான கட்டுரையைப் படித்துப் பார்க்க யாருக்குத்தான் விருப்பமிராது! ஆகையால் அதனைப் படித்துப் பார்த்து விட்டுத்தான் இதைத் தொடர்ந்து படிக்க படியுங்கள்.

எப்படி இருக்கிறது கட்டுரை? காதல் கலை நன்னி சொட்டிக் கொண்டுதானே இருக்கிறது! ஏன் என்மீது கோபிக்கின்றீர்கள். நிச்சயமாக மூன்றும் பக்கத்திற் கட்டுரையிருக்கின்றது. இன்னும் கண்டுபிடிக்கவில்லையா? மூன்றும் பக்கம்.....கீழ்ப்புறமாக வலது கோப்புற மூலையில் இருக்கிறதே.

நயவுகூர்ந்து இதனைப் படிப்பதை நிறுத்திவிட்டு அதை முதலில் படித்துப் பாருங்களேன். மிகச் சுவையான கட்டுரை.

அம்மாடியோவ்! என்மீது கோபித்துக் கொள்ளாதீர்கள். சும்மா மூன்பாத்தியாச் சொன்னேன். காதலா, கடமையா என்றதும் எத்தனை பேர் அதில் தவனம் செலுத்துகின்றார்கள் என்பதை யறியத்தான் எவ்வளவு ஆவல். இன்னுமதற்கு இல்லாவிட்டால் நானையதினம் வெளியாகும் பத்திரிகையைப் பாருங்களேன்!

அன்பான வாசகர்களே இப்படி யெல்லாம் நான் உங்களை ஏமாற்றவில்லை. 'ஏப்பிரல் முட்டாள்' ஒருவரின் வேலை இது.

ஆம். நாளைக்கு ஏப்ரல் முதலாம் திகதி. ஜாக்கிரதை!

கடலரிப்பை தடை செய்வது எவர் பொறுப்பு?

கொழும்பு, வெள்ளி

இலங்கையின் கரையோரப் பகுதியிலுள்ள நிலப்பகுதிகளை பெருந்தொகையில் கடலரித்து வருகிறது. கடலரிப்பைத் தடை யெய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எந்த அமைச்சு மேற்கொள்ள வேண்டும் என, அரசாங்கம் இன்னும் குறிப்பிடவில்லை. அதற்குத் தேவையான பணத் தொகைக்கு எவர் பொறுப் பேற்க வேண்டும் எனவும் குறிப்பிடப்படவில்லை.

இவ்வாறு விதலன்தாபன வீடமைப்பு அமைச்சு அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

நிலப்பகுதிகளை ஆறுகள் அரிப்பதைத் தடுப்பதற்கான வேலைகளை நீர்ப்பாசன இலாகா மேற்கொள்ள வேண்டும் என விதலன்தாபன இலாகா, தனது மகஜரில் யோசனை கூறியுள்ளது. வளவை, மகாவலி, களனி ங்கைத் திட்டங்கள் போன்ற பெரும் திட்டங்களையெல்லாம் மேற்கொண்டுள்ள நீர்ப்பாசன இலாகாவுக்கே இந்த வேலை இலகுவாக இருக்கும் என மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு நீர்ப்பாசனமும், வெள்ளத்தக் கட்டுப்படுத்துவதும் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளனவாகையாலும், பயிற்சியுடைய சேவையாளரை இந்த இலாகா கொண்டுள்ளதாகையாலும் நீர்ப்பாசன இலாகாவே இந்த வேலையை மேற்கொள்வது நலனுண்டு எனக் கருதப்படுகிறது.

இரத்தினபுரியில் ஆற்று நீர் நிலப்பரப்பை அரித்துச் செல்வது பற்றிச் சமீபத்தில் அறிவிக்கப்பட்டபோது நீர்ப்பாசன டைரக்டர், வேலையை மேற்கொள்வது தமது பொறுப்பல்ல என்று கூறியதும் மகஜரில் கட்டிக்காட்டப்பட்டிருந்தது.

சுகாதார பயிற்சி நிலையம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும்

கொழும்பு, வெள்ளி

சுகாதார சேவையில் ஈடுபடுபவர்களுக்கான சுகாதார பயிற்சி நிலையமொன்றை யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பித்து வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண சுகாதாரசேவைகளின் டைரக்டர் டாக்டர் ஜி. நதானியல்ல சுகாதார அமைச்சிடம் கோரியதன் பேரில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கழுத்துறையிலுள்ள சுகாதார பயிற்சி நிலையம் போலவே இதுவும் அமைய வேண்டும் என டாக்டர் நதானியல்ல யோசனை கூறியுள்ளார். கழுத்துறை நிலையத்தில், சுகாதார பரிசோதகர்கள், சுகாதார அறிவு பரப்புவோர், தாதிமார், மருத்துவதாதிமார் ஆகியோர் தமது நியமனங்களைப் பெறுவதற்கு முன்னர் பயிற்சி பெறுகின்றனர்.

யாழ்ப்பாணத் தாதிகள் பயிற்சிப் பள்ளிக்கூட மாணவிகளுக்கும் இந்த நிலையத்தில் பொதுசன சுகாதாரம் பற்றிய கல்வி வழங்கப்படும். இந்த நிலையத்தைத் தெல்லிப்பழையில் நிறுவுவதற்கு ஆலோசனைகள் செய்யப்பட்டு வருகிறது.

கண்டி, வெள்ளி

டும்பரா பள்ளத்தாக்கு, கொக்கோசெடி நடுவதற்கு ஏற்ற பகுதியல்ல எனப் பிரகடனப்படுத்த, கண்டி மாவட்ட விவசாயக் கமிட்டி முடிவு செய்துளளது. இந்தப் பகுதியிலுள்ள கொக்கோச் செடிகளை எல்லாம் அழித்து, புதிதாக கொக்கோச்செடிகளை நடுவதற்கு விரைவில் ஒழுங்குகள் செய்யப்படும் எனத் தெரிகிறது.

இந்தியாவில் தொழில்வளர்ச்சி வேகம் மந்தமடையும் காரணங்கள்

சென்னை வர்த்தகசபை கூட்டத்தில் தலைவர் உரை

சென்னை, மார்ச் 30

அந்நியச் செலாவணி தட்டுப்பாடு, மின்விசைத் தட்டுப்பாடு, ரயில் போக்குவரத்து வசதிக் குறைவு, இவற்றின்களின் விளைவாக ஏற்பட்டுள்ள அதிகரித்த உற்பத்திச் செலவு ஆகியவையே நாட்டில் தொழில் வளர்ச்சி வேகம் மந்தமடைந்திருப்பதற்குரிய காரணங்கள் என்று, சென்னை வர்த்தகசபையின் வருடாந்திரப் பொதுக் கூட்டத்தில் அதன் தலைவர் ஆர். எம். கிங் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

நிபுணர்களுடன் ஆலோசனை கலந்து நிர்வாகிகள் தத்தம் தொழிற்சாலையின் நிறுவன சக்தியை முதலில் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என்றும் இதை தற்போதைய உற்பத்தி அளவுடன் ஒப்பிட்டுப் பார்த்து, 15 சத விகிதத்துக்கு மேற்பட்டு குறைவு காணப்பட்டால், ஊதிய உயர்வின்றி அதிக நேரம் வேலை செய்ய தொழிலாளரை இணங்க வைக்கவேண்டும் என்றும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

இதற்காக நீண்ட விவாதங்கள் நடத்த வேண்டியிருக்கும் என்றும் யந்திர சாதன வசதிகளை அதிகரிக்கவேண்டியிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

9 அல்லது 10 மணி நேரத்தில் செய்து வந்த வேலையை 8 மணி நேரத்தில் செய்து முடிக்க தொழிலாளருக்கு பண ரூபத்தில் அல்லாது பிற வகைகளில் ஊக்கமளிக்க வேண்டியிருக்கும் என்றார்.

உற்பத்தித்திறன் அதிகரிக்க வேண்டும்: நிறுவன சக்தியை அதிகபட்ச அளவு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இல்லையேல் வெளிநாடு அந்நிய உற்பத்தியாளர்களின் போட்டியை சமாளிக்க முடியாது என்றார்.

கடந்த பத்து வருஷகாலத்தில் தொழிலாளர்கள் வேலைக்கு வராத் போக்கு அதிகரித்து வந்திருக்கும் என்றும் இப்போதெல்லாம் தொழிலாளர்கள் பண வருமானத்தை அவ்வளவு முக்கியமாக மதிப்பதில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது என்றும் அவர் சொன்னார்.

ஜவுளித் தொழில் பற்றி பிரஸ்தாபிக்கையில் பருத்தி உற்பத்திக்காக திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை எட்டிப் பிடிக்க முடியவில்லை. என்றார். நியாயமான அளவு மகசூல் பெறுவதற்கு தேவைப்படும் உரத்தில் பத்தில் ஒரு பங்காவது பருத்திப் பயிருக்கு போடப் படுகிறதா என்பதே சந்தேகம் என்று ஒரு நிபுணர் தம்மிடம் தெரிவித்ததாகச் சொன்னார். போதிய அளவு உரம் போடுவதன் மூலம் மட்டுமே பருத்தி மகசூலில் 50 சத விகிதம் அதிகரிப்பு காணமுடியும் என்றும் நிபுணர் சொன்னதாம். உணவு தானியப் பயிருக்கு உரம் இடும் விஷயத்தில் அரசாங்கம் காட்டும் ஊக்குவிப்புகள் பருத்தி மகசூலுக்கும் இருக்க வேண்டும் என்றார்.

பருத்தி அதிகமாக கிடைத்தால் ஏற்றுமதிக்கு அதிக ஜவுளி கிடைக்கும் என்றார்.

பிரிட்டன் ஐரோப்பிய பொது மார்க்கெட் ஏற்பாட்டில் சேரும் நிலைமையில் காப்பு வரி சலுகைகளை நாம் இழக்க வேண்டி நேரிடும் என்றும், அப்போது உற்பத்தி செலவைக் குறைத்தால் தான் இதைச் சமாளிக்க முடியும் என்றும் கூறினார். பருத்தி ஆலைகளை நவீன மயமாக்குவதே அதற்கு வழி என்றார்.

சர்க்கரை தொழில்பற்றி பிரஸ்தாபிக்கையில் கட்டுபடியாகாத தொழிற்சாலைகளை எடுத்துவிடவேண்டிய கட்டம் வந்துவிட்டது என்றார். எடையை அடிப்படையாகக் கொள்ளாமல் இனிப்புச்சத்தை அடிப்படையாகக்கொண்டு கரும்பை வாங்கும் ஏற்பாடு அமலுக்கு வரவேண்டும் என்றார்.

வரிகளையும் செலவுகளையும் மாற்றியமைத்து அரசாங்கம் உதவவேண்டுமென்றார். உற்பத்தி செலவைக்குறைப்பதுஉள் நாட்டு உபயோகத்தை அதிகரிப்பதற்கு அவசியமாகும் என்றும் குறிப்பிட்டார்.

வர்படச்சாலைகளுக்கும் பிற தொழில்களுக்கும் சுட்ட கரி கிடைப்பதில் உள்ள தட்டுப்பாடு பற்றிப் பிரஸ்தாபித்தார்.

இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம்காண அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று வற்புறுத்தினார். பரிகாரம் காண முடியவில்லையெனில் வெளிநாடுகளிலிருந்து சுட்ட கரி இறக்குமதி செய்வதுபற்றி பரிசீலிக்கவேண்டுமென்று யோசனை கூறினார்.

வரப்போகும் வருஷங்களில் கூடுதல், வரி விதிக்க அவசியமேற்பட்டால் அது மறைமுக வரிகளாயிருக்கலாம் என்றார். அப்போது தான் இந்த அதிகப்படியான சுமை பரவலாக விநியோகிக்கப்படும். என்றார்.

அசோசியேட்ட் வர்த்தக சபை தலைவர் மாக்கே தாலக் பேசுகையில் தொழிற் துறையினர் முன்புள்ள பல்வேறு சிரமங்களைப் பற்றி பிரஸ்தாபித்து இந்தியா பூராவிலும் ஏற்பட்டு வரும் தொழிற் புரட்சியின் சின்னங்களே இவை என்றார். தெரியாமல் வந்து புகுந்துக் கொண்ட தவறுகளை திருத்தும், விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்றார். தவறு என்று தெரிந்ததும் அதற்கு உடனடியாகப் பரிகாரம் காண நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்றும் திட்டகர்த்தர்களுக்கு மட்டுமின்றி அதிகார வர்த்தகத்தினருக்கும் ஏற்பட்டுள்ள பெரிய சோதனை இது என்றும் சென்னார்.

மின்விசை தட்டுப்பாடு விஷயத்தில் கழித்துக் கட்டின யந்திரங்களைப் புதிப்பிப்பது, வேலை நேரத்தில் மாறுதல் செய்வது. சொந்தத்தில் மின்விசை உற்பத்தி செய்து கொள்ள முன் வரும் ஸ்தாபனங்களிடம் தாராளமாக நடந்துக் கொள்வது ஆகிய வற்றின் மூலம் எவ்வளவோ செய்ய முடியும் என்றார்.

பல் வேறு வர்த்தக சங்கங்களுக்கும்அரசாங்கத்தாருக்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்பு தேவை என்றார்.

இலங்கையில் தயாராகும் ஆங்கிலப்படம்

கொழும்பு, வெள்ளி

பிரபல அமெரிக்க சினிமாக் கம்பனி யொன்று ஒரு படத்துக்கான காட்சிகள் முழுவதையும் இலங்கையில் படம் பிடிக்க இருப்பதாகத் தெரிகிறது. "எலிபண்ட் பில்" என்னும் இந்தப் படத்துக்கான காட்சிகளை இலங்கையில் படம் பிடிப்பதற்கு அனுமதி பெற்றுக் கொள்ளும் பொருட்டு இலங்கை அரசாங்கத்துக்கு அந்தக் கம்பனி விண்ணப்பித்துள்ளது. பர்மாவில் தேக்கு மரத்தை எடுத்துச் செல்வதற்கு உபயோகப் படுத்தப்பட்ட யானைகள் பற்றிய கதை ஒன்றே இத்தப்படத்தின் கதையாக அமைந்துள்ளது. இலங்கையில் பெருந்தொகையான யானைகள் இருப்பதாலேயே கம்பனி இலங்கையில் படக்காட்சிகளை எடுக்க விரும்புவதற்கு காரணம் எனத் தெரிகிறது.

கன்னம்வைத்த பழைய கான்ஸ்டபிள்

அம்பாந்தோட்டை, வியாழன்

கூரைமீது ஏறி கூட்டுறவுக் கடைக்குள் நுழைந்த ஒருவரை அம்பலாந்தோட்டை பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் திரு. ஜே. ஜயவத்தன நேற்று நள்ளிரவு பதுங்கியிருந்து பிடித்துள்ளார். பிடிபட்டநபர், முன்னர் கான்ஸ்டபிளாகக்கடமையாற்றியவர் என நம்பப்படுகிறது.

கடைக் கதவை உடைத்து உள்ளே நுழைந்த அந்த நபர் தமது கைகளுக்கு உறைகள் அணிந்திருந்தாரென்றும் அணிந்திருந்த காற்சட்டைப்பைக்குள் வீடு உடைக்கிற ஆயுதங்களும் திறப்பொன்றும் இருந்தன என்றும் கூறப்படுகிறது.

1000 ரூபாய் பிணையில் செல்லுமாறு அடுத்தமாதம் 18-ம் திகதி அம்பாந்தோட்டை மாஜிஸ்திரேட் கோட்டில் ஆஜராகும்படியும் அந்தநபர் கேட்கப்பட்டுள்ளார்.

சோமாவதி திலகாயக்காவுக்கு மாஜிஸ்திரேட் ரூ 75 அபராதம் விதித்தார்.

அமைச்சரின் கோரிக்கை மறுப்பு

கொழும்பு, வெள்ளி

கிராமப்புறங்களில் பரவிவரும் யானைக்கால் நோயைத் தடுப்பதற்கு முப்பது லட்சம் ரூபா தேவைப்படுகிறதென்று திரு. ஏ. பி. ஜயசூரியா விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க அரசாங்கம் மறுத்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாகவேதான் சுகாதார மந்திரியின் வேண்டுகோளுக்கு அரசாங்கம் இணக்கம் தெரிவிக்க வில்லை என்று தெரிகிறது.

ஸி. ஐ. டி வேடம்தரித்து கோயிலுக்குள் நுழைந்தனர்

மக்களைக் கண்டு கம்பி நீட்டினர்

பலாங்கொடை, வெள்ளி

கோவிலில் கள்ள நோட்டுகள் இருப்பதாக தங்களுக்கு தகவல் கிடைத்திருக்கிறது என்று கூறிக்கொண்டு, றஸ்ஸல கல கோவிலுக்குள் நுழைந்த சி. ஐ. டி வேடம் தரித்த இருவர், சிறிது நேரத்தில் மக்கள் கூட்டத்தைக் கண்டு கம்பி நீட்டிவிட்டனர். ஆனால் ஒருவர் பிடிபட்டுவிட்டார்!

கோவிலுக்குள் நுழைந்த சி. ஐ. டி. வேடம் தரித்த இருவரது வார்த்தைகளையும் நம்பிய மதகுரு, விஷயத்தை உண்மையென நம்பி, சிலருக்கு இத்தத் தகவலையும் அறிவித்தார். சிறிது நேரத்தில் கோவிலைச் சுற்றி மக்கள் குழுமிவிட்டனர். விஷயம் அம்பலமாகிவிட்டதெனக் கருதிய அவர்கள் ஓட்டம் பிடித்தனர். ஆனால் மாட்டிக்கொண்ட ஒருவர் பலாங்கொடை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பலாங்கொடையிலுள்ள சலூன் ஒன்றில் பாபராக வேலை பார்க்கும் இந்நபர், அண்மையில் தொண்டர்படையில் சேர்க்கப்பட்டு நீக்கப்பட்டார் எனக் கூறப்படுகிறது.

இலங்கை வானொலி தமிழ்நாடக விழா

சுன்னாகம், வெள்ளி

இலங்கை வானொலி நிலையத்தாரின் தமிழ் நாடக விழா ஏப்ரல் 10-ம் திகதிகொழும்பு ரேயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற விருக்கிறது. இவ் விழாவில் மூன்று நாடகங்கள் அரங்கேற்றப்படவிருக்கிறது.

'வருஷம் பிறந்து முன்னம் முன்னம், என்ற திரு. ஏ. டி. பொன்னுத்துரையின் நாடகமும் இங்கு அரங்கேற்றப் படுவனவற்றில் ஒன்றாகும். இந்நாடகத்தில் கலையரசு திரு. கே. சொர்ணலிங்கம், திரு செல்வரத்தினம், திரு மதி வசந்தா அப்பாத்துரை, திரு. கே. என். நவரத்தினம், திரு. ஏ. டி. பொன்னுத்துரை ஆகியோர் நடிக்கின்றனர். இம் மாதம் ஏப்ரல் 14 - ம் திகதி இரவு, இலங்கை வானொலி மூலம் அஞ்சல் செய்யப்பட விருக்கிறது.

அம்பத்தூர், மார்ச் 30

அம்பத்தூர், சிறுவர் சங்கத்தின் குழந்தைகள் கதை சொல்லும் போட்டி ஒன்று நடைபெற்றது. குழந்தைகள் நல்ல கதையை அழகான முறையும் அவர்களின் பேச்சு திறனை ஊக்கிப்பதற்கான இந்த போட்டியில் சங்க அங்கத்தினரல்லாத குரீன்தைகளும் கலந்து கொண்டனர். விழாவிற்கு தலைமை வகித்த குமாரி பத்மா பிரியதர்சினி குழந்தைகளாலேயே நடத்தப்படும் இச்சங்கத்தைப் பாராட்டி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கினார். மாஸ்டர் வி. விஸ்வநாதன் வந்தனே பாசரம் கூறி தேசிய கீதத்துடன் விழா முடிவடைந்தது

'பெண்கள் நல்லவேலையில் சேருபடவேண்டும்'

சாரய வழக்கில் மாஜிஸ்டிரேட் புத்திமதி

கம்பஹா, வெள்ளி

"இப்படியான கலபமான வேலைகளில், பெண்கள் ஒரு போதும் சேரபடக் கூடாது. பெண்களிலும் முடியக் கூடிய நல்ல வேலைகளில் கவனம் செலுத்த வேண்டும்."

அளுத்கம-போகமுவ என்ற இடத்தைச் சேர்ந்த சோமாவதி திலகாயக்கா என்பவர், சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட 6 திரும் வடிசாராயம் வைத்திருந்ததாகக்குற்றம் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கு கம்பஹா மாஜிஸ்திரேட் திரு ஏ.டி ஜே. குணவர்த்தன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம் மாஜிஸ்திரேட் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாஜிஸ்திரேட் மேலும் பின் வருமாறு தெரிவித்தார்:- "இப்படியான குற்றங்களுக்கு நான் இனிமேல் அபராதம் எதுவும் விதிக்கமாட்டேன். குற்றவாளியாகக் கண்டவர்களை நான் நிச்சயம் சிறைக்கு அனுப்புவேன். நான் முன்னர் கம்பஹா பகுதியில் இருந்த சமயம் இப்படியான குற்றங்கள் செய்தவர்களை நான் காணவில்லை. ஆனால் இப்பொழுது ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் இருக்கிறார்கள்.

சோமாவதி திலகாயக்காவுக்கு மாஜிஸ்திரேட் ரூ 75 அபராதம் விதித்தார்.

பெற்றோர் ஆசிரிய சங்கக்கூட்டம்

இறக்குவானை, வெள்ளி

பாடசாலைகளை மாற்றியமைக்கும் திட்டத்தின் கீழ் இறக்குவானைப் பரி. யோவான் பாடசாலையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதையிட்டு பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் விசேட கூட்டமொன்று நடைபெற்றது. நூற்றுக்கணக்கான பெற்றோரும் ஆசிரியர்களும் சமூகமளித்தனர். தலைவர் திரு. ஏ. கே இராசேந்திரம் பேசுகையில் "தற்போது கல்விப் பகுதியார் திட்டமிட்டபடி எமது பாடசாலையை சிரேஷ்ட பாடசாலை அந்தஸ்திலிருந்து ஆரம்ப பாடசாலையாக மாற்றுவார்களேயானால் இப்பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி, எதிர்காலத்தில் பாதிக்கப்படும்" என்று கூறினார். அடுத்துச் செயலாளர் திரு. கு. சிவநாயகமூர்த்தி, இ தொ. கா. பிரதிநிதி திரு. ஆர். யேசுதாசன், திரு. டி. பாலேந்திரா, தபால்கந்தோர் தலைவர் திரு. பி. தியாகராசா, மராமத்து ஓவர்சியர் திரு. சபாரத்தினம், திரு. ஏ. சுப்பையா ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

கீழ்வரும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

"பாடசாலைகளை மாற்றியமைக்கும் திட்டத்தின் கீழ் இப்பகுதியிலுள்ள தமிழ்ப் பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றத்தை விரும்பி, இறக்குவானைப் பரி. யோவான் பாடசாலையைத் தற்போது நடைபெறுவது போலத் தொடர்ந்தும் ப்ரைமரி கீழ்ப்பிரிவு முதல் க. பொ. த. ப. வகுப்புவரை தமிழ் மொழி மூலம் கல்வி கற்க வசதியளிக்கும் உயர்தர தமிழ்ப்பாடசாலையாக இயங்க அனுமதிக்குமாறு கனம் கல்வி அமைச்சரை உதவிக் கல்வி யமைச்சரும் இறக்குவானைப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. டி. கருணரட்ண மூலமாக பெற்றோர் ஆசிரிய சங்கத்தினராகிய நாங்கள் ஏக மனதாகவேண்டுகிறோம்.

காலியில் மீன்பிடி தீட்டத்தை ஆரம்பிக்க முடிவு

கொழும்பு, வெள்ளி

தகரமீன், குளிர் சாதனத்தில் வைக்கப்பட்ட மீன் ஆகியவற்றின் இறக்குமதியைக் குறைத்துக்கொள்ளு முகமாக காலியில் ஒரு மீனபிடித் திட்டத்தை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

66 லட்சம் ரூபாய் செலவில் மீன்பிடித் துறைமுகமொன்று முதலில் திறந்து வைக்கப் படும்.

வருடமொன்றுக்கு 750 தொன மீன் பிடிக்கக்கூடிய மீன்பிடி வள்ளங்கள் காலியில் உபயோகத்துக்கு விடப்படும். இப்பேற்பட்ட 10 வள்ளங்களையும் ஏனைய வசதிகளையும் ஏற்படுத்துவதற்கு சமார் 2 கோடி ரூபாய் தேவைப்படுகிறதாகக் காணி விவசாய நீர்ப்பாசன அமைச்சு மதிப்பிட்டுள்ளது. தனிப்பட்டவர்களை பங்காளி முறையில் சேர்த்துக்கொள்வதற்கு அமைச்சு விரும்பும் எனத் தெரிகிறது.

தற்சமயம் 30 லட்சம் ரூபாய்க்கு அதிகமாக மீன் இறக்குமதியில் செலவாகிறது.

பிள்ளைகளுக்கு இலவச மதியபோஜன செலவு

அரைப்பங்கை ஸ்தலஸ்தாபன சபைகள் ஏற்க சிபார்சு

கொழும்பு, வெள்ளி

பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு வழங்கும் இலவச மத்தியான போசனத்தின் செலவில் அரைப்பங்கை ஸ்தலஸ்தாபன சபைகள் பொறுப்பேற்கவேண்டும் என தேசிய கல்விக் கமிஷன் கேட்டுள்ளது. பிள்ளைகளின் மத்தியான போசனத்தில் மேலதிகமாக விசேஷ உணவைச் சேர்த்துக்கொள்ளுவதற்கு தேவைப்படும் செலவில் பாதிப் பங்கை ஸ்தலஸ்தாபன சபைகள் ஏற்றுக் கொள்ளும்படி கல்விக் கமிஷன் ஸ்தலஸ்தாபன வீடமைப்பு அமைச்சிடம் பிரஸ்தாபித்துள்ளது.

ஸ்தலஸ்தாபன சபைகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையே உள்ள நிதித் தொடர்புகள் விரிவாக வரையறைசெய்யப்பட்டால் கல்வி அமைச்சுக்கு நிதி உதவத் தயாராக இருப்பதாக ஸ்தலஸ்தாபன அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனாவிலிருந்து அரிசி வரத் தாமதமாகும்

அங்கு உணவு பற்றாக்குறை காரணம்?

கொழும்பு, வெள்ளி

சீனாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, முன்னர் அறிவித்த திகதியில் சீனாவிலிருந்து இங்கு அரிசி வரமாட்டாதென்றும், இதில் காலதாமதம் ஏற்படலாமென்றும் அங்கு உணவு பற்றாக்குறையே காரணம் என்றும் உணவு அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்போது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து பரிசீலனை செய்யப்படுமென்றும் குறிக்கப்பட்ட தவணையில் சீனா, அரிசி அனுப்பத் தவறினால் வேறு நாடுகளிடமிருந்து அரிசி பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுமென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

கடந்த வருடம் கைச்சாத்திடப்பட்ட றப்பர்—அரிசி ஒப்பந்தத்தின் கீழ், இலங்கைக்கு சீனா 200,000 டன் அரிசி அனுப்ப சம்மதம் தெரிவித்திருந்தது.

அடுத்த மாத ஆரம்பத்தில், சுமார் 6,000 டன் அரிசியைக் கொண்டுவரும் கப்பலொன்று கொழும்பை வந்தடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மீன்பிடித்தொழிலை விருத்திசெய்ய நடவடிக்கை

மாவிட்டபுரம், வியாழன்

மயிலிட்டி கிராமசபையில் நிறைவேறிய ஒரு தீர்மானத்தின் பிரகாரம் சபைத்தலைவர் திரு. எஸ். ஸ்ரீபாஸ்கரன் மீன்பிடி டைரக்டரிடம் பலாலியில் மீன்பிடித்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக அப்பகுதியிலுள்ள கடற்கரையோரத்திலுள்ள பாறைகளை அகற்றுவதற்கும் நிலப்பகுதியைக் கடல் அரித்துச் செல்லாதவாறு தடைசெய்வதற்கு சுவர்கட்டுவதற்கும் ஒரு லட்சத்து 38 ஆயிரம் ரூபா நிதிஉதவிகோரியிருந்தார்.

மீன்பிடி டைரக்டர் இத்தொகையை தமது இலாகா வழங்க முடியாதிருப்பதாகவும் திருத்தப்பட்ட மதிப்பீடொன்றைத் தயாரித்து அனுப்புமாறும் இப்பகுதியில் இரு இடங்களில் கால்வாய்களைக் கட்டினால் மீன்பிடித் தொழிலுக்கு உதவியாக இருக்குமென்றும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து இதற்கான செலவுத் தொகையாக 62 ஆயிரம் ரூபா நிதிஉதவுமாறு சபைத்தலைவர் மீன்பிடி டைரக்டரைக் கேட்டுள்ளார்.

மருந்து உற்பத்திச்சாலை

பூனா, மார்ச், 29

பூனாவில் 'ஸ்டெப்டோமைசின்' மருந்து உற்பத்திச் சாலையொன்றை பிரதமர் நேரு இன்று திறந்துவைத்தார்.

ஏரியில் இறந்து கிடந்தவர்

விசாரணை நடத்த உத்தரவு

கொழும்பு, வெள்ளி

மார்ச் 26-ம் திகதி டிக்வெலா பொலிஸ் நிலையத்துள் பூட்டிவைக்கப்பட்டுப் பின்னர் பொலிஸ் நிலையத்துக்குப் பின்புறமாக உள்ள ஏரியில் இறந்துகிடக்கக் காணப்பட்ட எல். தர்மசேனா என்பவரின் மரணம்பற்றி ஸ்தலத்துக்குச் சென்று விசாரணை நடாத்துமாறு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எம். டபிள்யு. எப் அபயக்கூன், உத்தரவு பிறப்பித்துள்ளார்.

உயர்தரப் பொலிஸ் அதிகாரி ஒருவர் ஸ்தல விசாரணையை ஏப்ரல் 4-ம் திகதி நடாத்துவார் எனப் பொலிஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன.

சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள்மீது எதுவித ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும் இப்பேற்பட்ட நடவடிக்கை மாஜிஸ்டிரேட்டின் விசாரணையைக் காத்திருக்கிறதென்றும், மாஜிஸ்டிரேட் விசாரணையை ஏப்ரல் 4க்கு ஒத்திப்போட்டதால் ஸ்தல விசாரணையும் அன்று நடைபெறவிருக்கின்றதென்றும் பொலிஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன.

டெவிநுவரா எம். பி. திரு பி. டி. விக்கிரமசூரியா பாராலிமெண்டில் இந்த விஷயத்தைக் கிளப்பினார்.

மாணவர்களுக்கு சைவ சமய போதனை

அளவெட்டி, வெள்ளி

அகில இலங்கைச் சைவப் புலவர் பட்டதாரிகளை சங்கம் எதிர் வரும் சித்திரை விடுமுறை நாட்களில் பிறமதக் கல்லூரிகளில் பயிலும்பொதுத் தராதரப் பத்திர (எஸ்.எஸ்.சி) வகுப்பு சைவமாணவர்களுக்கு சமயபாடப் போதனையை நடத்த தீர்மானித்துள்ளது. இவ்வாண்டில் சமயபாடம் கட்டாய பாடமாக்கப்பட்டிருந்தலால் மாணவர் பூரண சமய அறிவைப் பெறவேண்டியவர்களாக இருக்கின்றனர். ஆதலில் பிறமதச் சூழலில் பயின்ற சைவ மாணவர்களின் நலம் கருதி சங்கம் செயலாற்ற இருக்கும் 21 அம்சத்திட்டங்களில் தற்போதைய சூழ்நிலையில் இப்பணியை மிக அவசியம் எனவும் கருதுகிறது.

இச்சமயபாடப் போதனை யாழ்ப்பாணத்திலுள்ள நாவலர் வித்தியாசாலையை நிலைக்களனாகக் கொண்டே நாடாத்தப்பட விருக்கிறது. இதனைத் தொடர்ந்து இவ்வாண்டுப் பரீட்சைக்குரிய பட்டதாரி வகுப்புகளும் வழமை போல் நடத்தப்படும்.

இடமாற்றம்

பருத்தித்துறை, வெள்ளி

தட்டாதெரு மெதடிஸ்த பாடசாலையில் இருந்து திருமதிகள் எல். ஆறுமுகம், எஸ். ஆறுமுகம் (ஆசிரியைகள்) தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அல்வாய் மெதடிஸ்த பாடசாலை உதவியாசிரியர் திரு. ஏ வி. தம்பிஜயா அல்வாய் தெற்கு சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் ஏப்ரல் மாதம் 1-ம் திகதி புதியபாடசாலைகளில் கடமையாற்றுவார்

கைப்பந்தாட்டம்

தெல்லிப்பழை, வெள்ளி

புன்னாலைக்கட்டுவன் ஆங்கில பாடசாலைக்கும் அச்சுவேலி கிறிஸ்தவ பாடசாலைக்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் அச்சுவேலிப் பாடசாலை 15-3-, 15-9 புள்ளிகளால்வெற்றியீட்டியது.

நீர்வேலி அத்தியர் இந்துக் கல்லூரிக்கும் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் இந்துக் கல்லூரி 15-11, 15-10 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

இப்போட்டிகள் வலி கிழக்கு ஆசிரியர் சங்க ஆதரவில் நிகழ்ந்தன.

ஹை கமிஷனரை ஈர்த்த

கைத்தொழில் படங்கள்

லண்டன், மார்ச் 30

லண்டனில், இலங்கை ஹை கமிஷனராக இருக்கும் திரு. ஆர். எஸ். எஸ். குணவத்ன, நிர்மானப் பொருட்களை உற்பத்தி செய்யும் கம்பனியான மிஸேஸ் டெக்ஸியன் லிமிட்டெட்டின் கௌரவ விருந்தினராக இருந்தார்.

இக்கம்பனி, டெக்ஸியன் உருக்குப்பொருட்கள் எந்தவிதமான சகலவகை கட்டிட நிர்மாணங்களிலும் பாவிக்கப்படுகிறன்ன என்பதை விளக்கிக் காட்டும் படங்களைக் காட்சிக்கு வைத்தது.

புதிதாக முன்னேறிவரும் நாடுகளில், பாடசாலைகள், வீடுகள், வைத்தியசாலைகள், ஆலைகள் ஆகியன் இந்த டெக்ஸியன் பொருள் கொண்டு எப்படி விரைவாக அமைக்கப்படுகின்றன என்பதைக் காட்டும், படம் முக்கியமாக ஹை கமிஷனரின் கவனத்தை ஈர்ந்தது.

'சீனாவை பார்'

— டாக்டர் என். எம்.

எட்டியாந்தோட்டை, வெள்ளி

"வெகு சமீபத்தில் சுதந்திர மடைந்த சீனமக்கள் பெரும் முன்னேற்றமும் அபிவிருத்தியு மடைந்துள்ளார்கள். ஆனால் இலங்கையிலுள்ள நாம் அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றைக்கூட வரையறை செய்து கொள்ளவில்லை."

இவ்வாறு எட்டியாந்தோட்டை எம். பி. டாக்டர் என். எம். பெரேரா வாக்கடை மகில நிலையத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

இலங்கை அரசியல் விஷயத்தில் அதிகம் முன்னேற்றமடைந்துள்ளதென்றும் ஆனால் சிறிதளவேனும் பொருளாதார அபிவிருத்தியடையவில்லையென்றும் டாக்டர் என். எம். கூறினார்.

நாராயணன் இறுதிச்சடங்கு

சென்னை, மார்ச். 29

ஜெனிவாவில் மாரடைப்பினால் திடீரெனக் காலமான ஐ. நா. உதவி அதிகாரி திரு. டி. ஜி. நாராயணனின் ஈமக்கிரியைகள் இன்று சென்னையில் நடைபெற்றன.

பலாலியில் துறைமுக அபிவிருத்தி

அமைச்சருக்கு கிராமசங்கம்மகஜர்

தெல்லிப்பழை, வெள்ளி

பலாலியில் துறைமுகம் அமைப்பது சாத்தியமாகாது என உணர்ந்த மயிலிட்டி கிராமச் சங்கத்தினர் கலங்கள் கரைக்கு வரக்கூடிய முறையில் கடல் படுக்கையில் உள்ள கற்களை அகற்றி வசதி செய்வதற்கு உதவுமாறும் இது அமைப்பதற்கு ஒரு லட்சத்து முப்பத்தெண்ணாயிரம் ரூபாவரை செலவாகுமென மதிப்பீடும், அமைச்சுக்கு அனுப்பி வைத்தனர். இப்பெருந்தொகையை ஆரம்பத்தில் வழங்குவது சாத்தியமாகாதுஎனஇலாகா அதிகாரி அறிவித்தார். இதன்பின் திரு. பாஸ்கரனும் தொழில் மேற்பார்வையாளரும் குறிப்பிட்ட பகுதிகளில் பரிசீலனைகள் செய்ததைத் தொடர்ந்து கிராமச் சங்கத்தலைவர் தமது மதிப்பீட்டுத் தொகையை அறுபத்திரண்டாயிரம் ரூபாவாகக் குறைத்தார். இத்தொகை முந்திய மதிப்பீட்டுத் தொகையிலிருந்து 76 ஆயிரம் ரூபா குறைவானது.

பின்னைய மதிப்பீடு அரசினரால் ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

திருமலையில் நெற்காணி சட்டம்

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலை மாவட்டத்தில், நெற்காணிச் சட்டம் அடுத்த ஆண்டு முதல் அமுலுக்கு வருமென அண்மையில் திருக்கோணமலை கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில் காணிக் கமிஷனர் திரு. பொன்சேகா தெரிவித்தார்.

கிராமப் புறங்களில் பிரசாரக் கமிட்டிகள் நிறுவப்படும்.

'பூரண வாக்குமூலம் எடுக்கப்படும்'

— நீதிமந்திரி

கொழும்பு, வெள்ளி

சதி விசாரணைகள் முழுவதும் நடாத்தப்பட்டு முடியு முன்னர் பூரணமாக வாக்குமூலம் ஒன்றை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என நீதி அமைச்சர் திரு. சாம். பி. ஸி. பெர்ணாண்டோ செனட் சபைக்குக் கூறினார்.

சதிவிசாரணைகள் ஓரளவுக்கு முடிவடைந்து வருவதாகவும் சதியில் சம்பந்தப்பட்ட இடதுசாரிக் கட்சியினர் பெயர்களை இந்தச் சமயத்திலும் வெளிப்படுத்தாமலிருப்பது நன்று என அரசாங்கம் கருதுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அநுராதபுரத்தில் வாதநோய்

அநுராதபுரம், வெள்ளி

அநுராதபுரத்தில் இரு பிள்ளைகளுக்கு இளம்பிள்ளை வாதநோய் கண்டு அநுராதபுரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஒரு வயதான பிள்ளையொன்று நோயுற்று ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது இளம்பிள்ளை வாதநோய் என்று சந்தேகிக்கப்பட்டது. பின்னர் அந்தப் பிள்ளைக்கு அதே நோய் கண்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது. ஆஸ்பத்திரியின் அதே 'வார்டில்' நான்கு வயதுப் பிள்ளையொன்றுக்கும் வாத நோய் கண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆஸ்பத்திரிக் கமிட்டித் தலைவர் திரு. எச். ஏ. ஜயவிக்ரம (ஜெ. பி. யு. எம்) நோய் தடுப்பு மருந்து அனுப்பி வைப்பதற்கு ஒழுங்குகள் செய்யுமாறு சுகாதார அமைச்சருக்குத் தந்தி அனுப்பியுள்ளார்.

ங்கள் மேனியின் மினுக்கத்திற்குப் புதுவாற்று

நவீன வாழ்க்கை முறை வெகு சிரமமானது. தூசு, உஷ்ணம், வியர்வை ஆதியனவற்றின் தாக்குதலிலிருந்து உங்கள் சருமத்தைப் பாதுகாப்பதற்கு, ஆரோக்கியத்தை விருத்தி செய்யும் இயற்கையான எண்ணெய் வகைகள் தேவை. ராணி சந்தன சோப், இந்தப் பாதுகாப்பையளித்து, உங்கள் மேனியின் மினுக்கத்திற்குப்புத்துயிர் ஊட்டுகிறது. ராணி சந்தன சோப், சருமத்தை ஊடுருவிச்சுத்திகரிக்கிறது-மறந்து விடாதீர்கள்;

ஊடுருவிச் சுத்திகரிக்கிறது

ராணி சந்தன சோப்

இன்றே எழுதி, ராணி பரிசுத்திட்டப் புத்தகத்தைப் பெறுங்கள்

ஏதேசி இன்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் லிமிட்டெட்,

அஞ்சல் பெட்டி 21. கொழும்பு

GC/B/1

) பேர்களுக்கு ம்பிள்ளை வாதம்

ண்டில் உதவி மந்திரி தகவல்

பு, வெள்ளி ரத நோய் பரைப் பிடித் ஆயினும் மக் யத் தேவையில் காதார மந்திரி யின் பாராளுமன்றக் காரிய தரிசி திரு. ஜே. பி. ஒபயசே கரா பார்லிமெண்டில் கூறினர். ஒரு லட்சம் தடவை உட்கொள் ளக் கூடிய மருந்து தீவெங்கும் விநியோகிக்கப் பட்டுள்ளதென் றும், அடுத்த சில தினங்களில் மேலும் மருந்து விநியோகிக்கப் படுமென்றும் கூறிய உதவி மந்திரி பிரிட்டன், கனடா, அமெ ரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளி லிருந்து மேலும் மருந்துகள் எதிர் பார்க்கப்படுவதாய்க் கூறினர்.

பல்லேகலே தோட்டம்

நிலையை ஆராய ஒரு கமிட்டி

கொழும்பு, வியாழன்

தெயிலை,ரப்பர் தோட்டங்கள் துண்டாடப்படுவதைக் கட்டுப் படுத்தும் சட்டத் திருத்த மசோதாவை காணி விவசாய மந்திரி திரு சி. பி. டி' சில்வா நேற்று பார்லிமெண்டில் சமர்ப் பித்தார்.

கொக்கோதோட்டங்கள் துண் டாடப்படுவதைத் தடுக்கும் ஷரத்தும் இந்த மசோதாவில் சேர்க்கப்பட்டுள்ளது.

இத் திருத்த மசோதாவைச் சமர்பித்து மந்திரி திரு. சில்வா பேசுகையில் பல்லேகலே தோட் டத்தைத் துண்டுபோடும் பிரச் சினைபற்றி ஆராய ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டிருப்பதாகத் தெரிவித்தார். தோட்டங்கள் துண் டாடப் படுவதுசம்பந்த மாக அங்கத்தவர்கள் பல் வேறுவிதமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளதாகவும் இந்த மசோதாவை சபையின் நிரந்த ரக் கமிட்டிமுன் சமர்ப்பிக்க உத்தேசித்திருப்பதாகவும மந் திரி சில்வா கூறினர்.

ஐக்கிய பண்டகசாலை பொதுக்கூட்டம்

அதிகாரிகளால் கூட்டப்படும்

பருத்தித்துறை, வியாழன் சமீபத்தில் நடைபெற்ற விசாரணையை அடுத்து, கற் கோவளம் ஐக்கிய பண்டக சாலைச் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று கூட்டுறவு அதி காரிகளால் கூட்டப்படலாம் என நம்பப்படுகிறது.

இப்பண்டகசாலைச் சங்கம் சுமார் 7 ஆண்டின் பின் வரு டாந்தக் கூட்டத்தை நடத்தி உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தது. ஆனல் அக்கூட்டம் முறையற்றதென கூட்டுறவு ஆணையாளருக்கு புகார் செய் யப்பட்டதை அடுத்தே விசா ரணை நடைபெற்றதாகக் கூற ப்படுகிறது. இச்சங்கநிர்வாகம் சம்பந்தமாக பல விஷயங்களை கூட்டுறவு அதிகாரிகள் சங்க நிர்வாகத்தை கேட்டிருக்கின் றனர்.

சைவசமய ஆராய்ச்சிக் கழகம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணப் பாடசாலை களில் சைவசமய பாடங்கள் கற்பிக்கும் முறைகளை ஆராயும் நோக்கமாக ஒரு ஆராய்ச்சிக் கழகம் ஏப்ரல் 4-ம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல் லூரியில் நடைபெறுவதற்குரிய ஒழுங்குகளை வடபெரும்பாக உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் செய்து வருகிறார்.

அவர் பாடசாலைத் தலைமை யாசிரியர்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் சுற்றறிக்கை யில் பாடசாலைகளில் சமயம் கற்பிப்பதற்கு விசேட பிரச் சினைகள் உண்டாயின் அறிவிக் குமாறு கோரியுள்ளார்.

வானலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

சனி, 31-3-62

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 முகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததினவாழ் த்துக்கள், 5-15 இளைஞர் மன் றம், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 சிவ ஞான சுந்தரி விஜயரத்தினம் பாட்டு.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும் செய்திச் சுருள், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத் தியக் கோஷ்டி, 9-30 மோக னம்பிகை கணேசன் பாட்டு, 10-15 பக்திப் பாடல்கள்.

ஞாயிறு, 1-4-62

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 தேர்ந்த இசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம்—25, 8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ் லிம் சமயப் பாடசாலை, 9-30 கதம்ப இசை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர் பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ் த்துக்கள், 5-15 நிலைய ஒலிப் பதிவுகள், 5-45 திரைக்குரல். 6-30 தாளவாத்தியக் கச்சேரி.

இரவு 7-00 மாதர் கேட் டவை, 7-30 யோகேஸ்வரி இராசையா பாட்டு, 8-00 முஸ் லிம் நிகழ்ச்சி, 9-15 'அத்தான் அத்தை' நாடகம், 9-45 தேர் ந்த இசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

திருச்சி

சனி, 31-3-62

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச் சிக் குறிப்புகள், 7-30 சிதம் பரம் எஸ். ராமானுஜம் வய லின்.

பகல் 1-00 துதிப் பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல் இசை, 2-10 சிதம்பரம் எஸ். ராமானுஜம் வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 வரலாற்றில் சான்று, 8-00 திரைப்பட இசை, 8-40 இசைமாலை, 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி

ஞாயிறு 1-4-62

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச் சிக் குறிப்புகள், 7-30 கமலா பாட்டு, 8-15 புதுக்கோடு கிருஷ்ணமூர்த்தி பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட் டவை, 12-30 சூரிய காந்தி கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணி மலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 என். எல். கானசரஸ்வதி பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கல்விடைக் குறிச்சி, ஏ. பாலசுப்பிரமணிய பாகவதர் பாட்டு, 8-30 கமலா பாட்டு, 9-15 வாத்திய இசை, 9-45 ஆகாசவாணி ஒலிம்பதி வுகள்.

தூதுகோஷ்டி திரும்பியது

கொழும்பு, வியாழன்

டோக்கியோவில் சமீபத்தில் நடைபெற்ற ஆசிய தூரகிழக்கு நாடுகளுக்கான பொருளாதா ரத் கமிஷனின் மகாநாடொன் றுக்குச் சென்றிருந்த இலங் கைத் தூதுகோஷ்டி செவ் வாய்க்கிழமையன்று இலங்கை வந்துசேர்ந்தது.

லொறி மோதி மரணம்

நீர்கொழும்பு, வியாழன்

நீர்கொழும்பு கட்டுவாவைச் சேர்ந்த வீரக்கொடி ரூப்பேர்ட் சில்வா (வயது 32) என்பவர் சைக்கிள் ஓடிக்கொண்டிருந்த போது ஒரு லொறியினல் மோதப்பட்டு மரணமானர் சுமார் 32 அடி தூரத்துக்கு லொறியுடன் அவர் இழுத்துச் செல்லப்பட்டார்.

அரிவரி (கீழ்ப்பிரிவு) வகுப்புகளுக்கு பிரவேசம்

வருடம் இரு தடவை அனுமதிக்க யோசனை

கொழும்பு, வெள்ளி

அரிவரி(கீழ்ப்பிரிவு) வகுப்புக் களுக்கு வருடம் இருதடவை கள் பிள்ளைகளுக்குப் பாடசாலை களில் பிரவேசம் வழங்கவேண் டும் என்ற ஒரு பிரேரணையைக் கல்வி அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

பிள்ளைகளின் பள்ளிக்கூட பிரவேச வகுப்பை 4 வயதும் 9 மாதமுமாக உயர்த்தியதிலி ருந்து பெற்றோர்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகக் கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். குறிக்கப் பட்ட வயதுக்கு ஒரு நாளினல் வயது குறைவான பிள்ளைக ளுக்கும் பிரவேசம் மறுக்கப் படுகின்றதெனவும் அப்படி யான பிள்ளைகள் அடுத்த வரு டம்வருமளவிற்கும் வீட்டிலேயே இருக்கவேண்டியவர்களாகிறார் கள் எனவும் அந்த அதி காரி விளக்கிக் கூறியுள்ளார். இந்த நிலைமையை மாறுவதற் காகவும், பெற்றோர்களுக்கு உதவி புரிவதற்காகவும் புதிய பிரேரணையை சாதகமான முறையில் தாம் ஆராய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரவேச வயதுச் சட்டத்தி னல் பெருந்தொகையான பெற் றோர்கள் ஏமாற்றம் அடைந் துள்ளார்கள் எனக் காலி எம். பி. திரு தஹநாயக்கா சமீபத்தில் கல்வி அமைச்சரி டம் கூறியுள்ளார். கல்வியைப் பொறுத்தவரை இந்த நியதி உசிதமானதல்ல எனவும் வருட மொன்றில் இருதடவை கள் பிள்ளைகளுக்குப் பாட சாலைகளில் பிரவேசம் வழங் கப்படவேண்டும் எனவும் ஜன வரி 2-ம் திகதியும் மே 2-ம் திக தியும் பிரவேச தினங்களாக இருக்கவேண்டும் எனவும் திரு. தஹநாயக்கா ஆலோசனை கூறியுள்ளார்.

தமிழ்நாடு சட்டசபை

சென்னை, மார்ச் 29

தமிழ்நாடு சட்டசபையின் புதிய அமைச்சர்கள் இன்று பிரமாணம்செய்து பதவியேற்ற னர்.

நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.

கனபோ பொப்லின்

ஆமாம், நாளுக்குநாள் கடின மாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடின மான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்லின் பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மெனலமயான பல வண்ணங்களிலும் இடைக் கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

சகவினியோகஸ்தர்கள்: வி. டப்ளியூ. ஈ.

கடைகளுமிடம்: வி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ஸ்ரோஸ் மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது. CWE

CWE/TX/11

"மனைவி ஓடியதும், சுட்டதும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன"

கிளிநொச்சி கொலை வழக்கில் எதிரி வாக்கு மூலம்

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சி கொலைவழக்கு நேற்று 5-வது நாளாக வட பகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச்.டபிள்யு. தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரியான கேசவன் பெருமாள் என்பவர் வாக்குமூலமளித்தார். இதன்பின் முடிக்குரிய வழக்கறிஞர் தமது தொகுப்புரையை முடித்ததைத் தொடர்ந்து எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. எஸ். நாகராசா தமது தொகுப்புரையை ஆரம்பித்தார். இந்த வழக்கில் தீர்ப்பு திங்கட்கிழமை வழங்கப்படுமெனத் தெரிகிறது.

சென்ற வருடம் மார்ச்மாதம் 27ந் திகதிமாரிமுத்துசுப்பையா என்பவரைக் கொலை செய்ததாக கேசவன் பெருமாள் என்பவர்மீது குற்றஞ்சாட்டி இவ் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

முடிக்குரிய தரப்பில் வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜராஞர்.

எதிரி தரப்பில் திரு எஸ். நாகராசா திரு. ஆர். கோபாலரத்தினத்தின் உதவியுடன் திரு. எஸ். மகாதேவாவின் அனுசரணையுடன் ஆஜராஞர்.

இவ் வழக்கில் எதிரியான கேசவன் பெருமாள் வாக்கு மூலமளிக்கையில் கூறியதாவது:—

நான் ஆற்றில் நீராடிவிட்டு மாலையில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். அந்நேரம் எனது குடிசையில் எனது மனைவி ரொட்டிசுட்டுக்கொடுக்கச் சுப்பையா சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் இருந்தவிதம் எனக்குப் பிடிக்கவில்லை. இங்கே என்ன செய்கிறாய்? உடனே வெளியேபோ" என்று நான் சொன்னேன். "வெளியில் செல்லாவிடில் என்னடா செய்வாய்?" என்று சுப்பையாடேக்டு என்னை அடித்தார். இருவருக்கும் சண்டை மூண்டது. இழுபறிப்பட்டுக் கொண்டு வீட்டுக்கு வெளியே வரும்போது யோகசிங்கமும், பழனிச்சாமியும் எம்மிருவரையும் பிரித்துவிட்டனர்.

இரவு போசனத்தின் பின், இன்றுபகல் மூன்று மான்கள் குளக்கரையால் போயின' என்று யோகசிங்கம் சொன்னது ஞாபகத்திற்குவர துப்பாக்கியை எடுத்துக்கொண்டு இரவு எட்டு அல்லது எட்டரை மணிபோல் மான் கடுவதற்காக ஒன்றரை இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள குளத்தடிக்குப் போகப்புறப்பட்டு துப்பாக்கியுடன் சென்றேன்.

மனைவியின் குரல்கேட்டது

இரண்டொரு மணிநேரம் மானைத் தேடியும் அகப்படாது வீட்டிற்குப் புறப்பட்டேன். நான் திரும்பிவரும் பாதையில் யோகசிங்கத்தின் வீட்டைக் கடந்துசெல்லவேண்டும். அவரது வீட்டுக்கருகாமையில் வரும்போது அவரது குடிசைக்குள் மென்மையான சத்தத்தில் யாரோ இருவர் கதைப்பது என் காதில் விழுந்தது. அந்தச் சத்தத்தை உற்றுக கேட்கும்போது ஒன்று எனது மனைவியினதாயும், மற்றது சுப்பையாவினதாகவும் இருந்தது. உடனே குடிசைக்குள் எட்டிப் பார்த்தேன். அப்பொழுது இருவரும் மிக நெருக்கமாகப் படுக்கையில் இருப்பதைக் கவனித்தேன். என்ன செய்வதென்பது உடனடியாகவே எனக்குத் தெரியவில்லை. அவ்வளவு தூரம் எனக்கு ஆத்திரமாக இருந்தது. நான் என்ன செய்தேன் என்பதும் எனக்கு ஞாபகமில்லை.

நான் பொலிசுக்குப் போக வேண்டுமென்று தோன்றிற்று. துப்பாக்கியுடன் பொலிசுக்குச் சென்றவழியில் ஆறுமுகத்தை அழைத்து துப்பாக்கியை அவரிடம் ஒப்படைத்தேன். பின்னர் கிளிநொச்சிப் பொலிசுக்குக் காலை ஆறரைமணியளவில் போய்ச் சேர்ந்தேன். நான் எனது வாக்குமூலத்தைக் கொடுத்ததும் இன்ஸ்பெக்டர் மூர்த்தி வரும்வரையும் அங்கு இருக்குமாறு சொன்னார்கள்.

முடிக்குரிய தரப்பு வழக்கறிஞரின் குறுக்குவிசாரணைக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:—

இருவரையும் பார்த்ததும் 'வெளியாலே வாடி' என்று கத்தினேன். அவள் எழுந்து எங்கள் குடிசைப்பக்கமாக ஓடினாள். நான் சுப்பையாவைச் சுட்டேன். மனைவி எழுந்தோடியதும் நான் சுட்டதும் திடீர்திடீரென முடிந்தபடியால் எதையும் சரியாகச் சொல்ல முடியவில்லை. நான் அங்கிருந்து வீட்டிற்குப்போனபோது வீட்டில் மனைவி இல்லை. யோகசிங்கம், பழனிச்சாமி ஆகியோரையே காணவில்லை. யோகசிங்கத்துடனே, பழனிச்சாமியுடனே எனக்கு ஒருவித திருப்தியினமும் கிடையாது. எனக்கு எதிராக அவர்கள் பொய்ச் சாட்சி சொல்லவேண்டிய அவசியம் கிடையாது.

நீதியரசரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், தான் சம்பவம் நடைபெற்றபோது, தனக்கு விவாகமாகி 13 ஆண்டுகளாகியிட்டதென்றும், அவளோத் தான் சந்தேகத்துடன் முன்னெருபோதும் நோக்கவில்லையென்றும் முன்பெல்லாம் ஒழுங்காக இருந்தாளென்றும் எதிரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிசார்களென்பதும் தெரியுமா? என்று திரு. சமரக்கொடி கேட்டார்.

இதற்கு சபைமுதல்வர் திரு. சி. பி. டி, சில்வா பதிலளிக்கையில் இவ் விஷயத்தை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவருவதாகத் தெரிவித்தார்.

கோவாவுக்கு வெளியே!

புதுடில்லி, மார்ச் 30

கோவாவில் காவலிலுள்ள போர்ச்சுக்கீஸிய சிப்பாய்களும் அதிகாரிகளும் கோவாவுக்கு வெளியே முகாம்களில் வைப்பதற்கு இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கணக்காளர் பதவி இடமாற்றம்

மாவிட்டபுரம். வெள்ளி காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் இதுவரை காலமும் இயங்கிவந்த கணக்காளர் பகுதி 1ம் திகதி தொடக்கம் கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளது.

தென்னிலங்கைக்கு :...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முகாந்திரம் ஈ. பி. இராசையா ஜே. பி. பேசுகையில் பின்வருமாறு கூறினர்:-

யாரைக் கௌரவிக்கவேண்டுமோ அவரைக்கௌரவிப்பதற்காக நீதிபதிகள், அரசாங்கத் தலைவர்கள், சீமாட்டிகள் மற்றும் பிரமுகர்கள் ஒன்றுகூடி இருப்பது இதுதான் முதல் தடவை.

ஒரு அங்கியாக, பட்டை தீட்டாத கடினமான வைரக் கல்லாக கேனல் உடுகமகுமார் ஒரு வருடத்துக்கு முன் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தார். யாழ்ப்பாணம் அவரை ஒளிவீசும் வைரக்கல்லாக்கியுள்ளது.

இன்று திரு. உடுகம கேணலாக பதவி உயர்வுபெற்றுச் செல்கிறார். இன்று அவர் மீக்கையுள்ள ராணுவத் தலைவராக விளங்குகிறார். அவர் ஒரு திறமைவாய்ந்த நிர்வாகி; வெற்றிகரமான சமாதான வீரர். இவையெல்லாவற்றையும்விட அவர் ஒரு கனவான்.

தென்னிலங்கையில் எங்கள் தூதுவராக, எங்களுக்காக எடுத்துரைக்கும் நியாயவாதியாக கேனல் உடுகமவையும் திருமதி உடுகமவையும் நியமிப்பதில் என்னுடன் ஒத்து ழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சிங்களமக்களுக்கும் தமிழ்மக்களுக்குமிடையிலுள்ள தப்பபிப்பிராயங்களை நீக்குவதற்கு கேனல் உடுகமவையும் திருமதி உடுகமவையும் நம்பியிருப்போம். அவர்கள் எங்கள் சமாதானத்தூதுவர்களாக சேவைபுரியட்டும். சிங்களமக்களுக்கும் தமிழ்மக்களுக்குமிடையே ஒருகாலத்தில் நிலவிய நல்லெண்ணமும் சௌஜன்யமும் மீண்டும் நிலவுவதற்கு அவர்கள் உதவிபுரியட்டும்.

படைத் தலைவராகவிருந்து இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் நிலைபெறவும் சமாதானமும் கபிட்சமும் ஓங்கவும் கேனல் உடுகம அரசாங்கத்துக்கு உதவிசெய்வாரெனநாங்கள் நம்புவோம்.

பொதுசேவை தொழிலாளர் ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

அரசாங்க போதுச்சேவைத் தொழிலாளர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் 14-வது ஆண்டு நிறைவுவிழா வருகிற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் அரசாங்க சிங்களப்பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இளைஞனின் கலைத்

நீதியரசர் பாரா

மத்திய கல்லூரி

சிப்பிக் கண்கா

யாழ்ப்பாணம், சனி

"யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பிரபல கலைஞர்களையும் கல்விமான்களையும் உற்பத்தி செய்து நாட்டுக்களித்த ஸ்தாபனமாகும். அதேவரிசையில் ஒரு இளங்கலைஞரையும் தோற்றுவித்துள்ள தென்பதற்கு யோகநாதன் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்."

இவ்வாறு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் மத்திய கல்லூரி மாணவன் செல்வன் சரவணமுத்து யோகநாதனின் (வயது 17) சிற்பக் கண்காட்சியை நேற்றுக்காலை ஆரம்பித்து வைத்த நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கண்காட்சிக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கேர்னல் ஏ. ஆர். உடுகம உட்பட பல பிரமுகர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் சமுகமளித்திருந்தனர். இன்று இரண்டாவது நாளாகவும் இக் கண்காட்சி நடைபெறுகிறது. இன்றைய கண்காட்சியை உதவி வித்தியாதிபதி திரு எஸ். யூ. சோமசேகரம் திறந்து வைப்பார்.

சிப்பிகளைக்கொண்டு அழகுறவண்ணங்கள் தீட்டி விதம்விதமான பொம்மைகளை அழகுறவாக்கிக் [illegible] ளார் செல[illegible] சிறந்தமுறை[illegible] கொண்டு செ[illegible] பலவித பொம்மைகளை[illegible] சங்கு, சிப்பி வர்ணங்களையு[illegible] பார்த்த பலரும் யோகநாதனின் கைவண்ணத்தை[illegible] பாராட்டினர்.

நீதியரசர் டாக்டர் தம்பையா இளைஞனின் கைத்திறனை[illegible] பாராட்டிவிட்டு மேலும் பேசினாவது:—

இளமையில் யோகநாதனிடை[illegible] புலமை கலைத்துறைக்கு[illegible] சிறந்த வாய்ப்பாகும். இப்படியான கலைகள் நம் நாட்டில் வளர சகலரும் உதவியளிக்க வேண்டும். இவ்வித கலைகளில் நாமெல்லோரும் ஈடுபடவேண்டும்.

இன்னும் பலரும் பேசினர்.

முள்ளிப்பற்று கி. ச. உபதேர்தல்

யாழ்ப்பாணம். வெள்ளி.

முள்ளிப்பற்று கிராமசபையின் 6ம் வட்டார இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரக்கள் கோரப்பட்டபோது திரு. ஸ்ரன்லிலோஸ்மாத்திரம் அபேட்சை மனுத்தாக்கல் செய்திருந்தபடியால் அவர் ஏகமனதாக அவ்வட்டார அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி பிளாஸா நவா

(கொழும்பு) (வெள்ளவத்தை) (கும்பளித்தெரு)

வெலிங்டன் விஜயா

(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)

பல வீரதீரச் செயல்கள் நிறைந்த

சிறந்த கலர் படம்!

பார்த்து படன் அடையுங்கள்!

சித்ரா : அசாத்

கிருஷ்ணகுமாரி

நடித்த

ஜிம்போ

(தமிழ், முழுநீள கேவா கலர்ப் படம்)

மலேகா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30 க்கு

சிவாஜி, பண்டரிபாய் நடித்த

கண்கள்

சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும் கிழமை நாட்களில் மாலை 4-15 க்கும்

சாலி சப்ளின் நடித்த

கோல்ட் ரஸ் (GOLD RUSH)

(ஆங்கிலம்)

இப்பத்திரிகை சமுகநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

சமுகநாடு

1-4-62 வாரப்பதிப்பில்

★ உலகம் முழுவதற்கும் ஒரே மொழி
ச. தியாகராசர்

★ ஒலிவரும் நானும்
பேராசிரியர் செ. சுந்தரலிங்கம்

★ உலகமேடையில் இராமனும் கிருஷ்ணனும்

★ கப்பல்கள் ஒட்டும் காரிகைகள்

★ நாடு நலம் பெற.....

உலக மேடை : மகளிர் மன்றம்

கலை அரங்கம் : சிறுவர் பூங்கா

மற்றும் பல சுவையான அம்சங்கள்

தனிப்பிரதி சதம் 15